காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 05, செவ்வாய்க்கிழமை 20.12.2016 | கதிர் 45

குடத்தனையில் வயோதிப மாது வெட்டிக் கொலை

நேற்றிரவு 11மணிக்குபொற்பதி குடத்தனையில் வீட்டில் வயோதிபக் கணவருடன் இருந்த தங்கவேலாயுதம் பரமேஸ்வரி (வயது 62) என்ற வயோதிப மாது இனந் தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் இன்று அதிகாலை வரை வீட்டிலேயே இருந்ததாகத் தெரிகிறது. (உ-40)

வடக்கு மாகாண சபையின் ஊழலை மத்திய அரசே விசாரிக்க வேண்டும்!

இப்படிக் கூறுகின்றார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

"வடக்கு மாகாண சபையில் ஊழல் இடம்பெறுவதாக, ஆளும் கட்சியினரே முதலில் குற்றம் சாட்டினார்கள். ஆகவே மத்திய அரசே இதில் தலையிட்டு விசாரிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம்."

-இப்படிக் கூறியிருக்கின்றார் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா. பக்கம் 19 »»

சம்பந்தர் இந்தியாவில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் சில தினங்களுக்கு முன்னர் இந்தியா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மருத்துவ பரிசோதனைக்கான அவரின் வழமையான இந்தியப் பயணமே இது என்று அவருடன் தொடர்புடைய தரப்புகள் 'காலைக்கதிருக்குத்' தெரிவித்தன.

தீர்வு யோசனைகள் குறித்து இந்தியாவுடன் பேச விரும்புகின்றோம் என கூட்டமைப்பின் மூத்த தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மாகாண சபை உறுப்பினராக ரெம்லாவின் புவனேஸ்வரன்

நேற்று அவைத் தலைவர் முன் பதவி ஏற்பு

முல்லைத்தீவு, டிசெ.20

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக முல்லைத் தீவைச் சேர்ந்த ஆ.புவனேஸ்வரன் நேற்று திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண் டார்.

வடக்குமாகாணசபையின்பிரதிஅவைத்தலைவராகச் செயற்பட்ட, முல்லைத்தீவு மாவட் பக்கம் 20 »»

வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சர்ச்சை

தவராசா மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் டக்ளஸ்!

யாழ்ப்பாணம், டிசெ.20

"வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் பதவியை எமது கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் தவநாதனுக்கு விட்டுக் கொடுப் பதற்கு சி.தவராசா மறுப்பாரே யானால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் "

- இவ்வாறு தெரிவித்திருக் கின்றார் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. இவ்விடயம் தொடர்பாக அவர்நேற்றுமேலும்கூறியவை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் பதவி முதல் அரைவாசிக்காலம் கமலேந்திரனுக்கும் எஞ்சிய அரைவாசிக்காலம் தவநாதனுக்கும் உரியது என்பது ஆரம்பத்தில் கட்சி எடுத்த முடிவு.

பக்கம் 20 »»

தமிழர்களைச் சமாதானப்படுத்த சிங்களவரைப் பகைக்காதீர்!

நல்லாட்சி அரசுக்கு மஹிந்த எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.20

தமிழர்களை சமாதானப்படுத் துவதற்காக மாகாண முதலமைச் சர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும்விதத்தில்அரசமைப்பை மாற்றுவதன் மூலம் சிங்கள மக் களின் கோபத்துக்கு இலக்காக வேண்டாம்.

இவ்வாறு நல்லாட்சி அரசை எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ.

பக்கம் 20 »»

14 அம்சக் கோரிக்கைகள் முன்வைத்து தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, டிசெ.20

தபால் சேவை ஊழியர்கள் 14 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இன்று அதிகாலை முதல் 48மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள் ளனர் என ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கம் அறிவித் துள்ளது.

ஆனால், அனைத்துத் தபால் சேவை ஊழியர்களின் விடு முறைகளும் இரத்துச் செய்யப் பட்டுள்ளன என தபால்மா அதிபர் பி.எல். அபயரத்ன தெரிவித் துள்ளார்.

10 வருடங்களாக தபால் திணைக்களத்தில் காணப்பட்டு கின்றபிரச்சினைகளுக்குத்தீர்வு காணுமாறுநாங்கள்பலதடவை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தோம். உரிய தீர்வு வழங்

பக்கம் 20 »»

அளப்பு அருணாசலம்

ஊழல் குற்றச்சாட்டோ.... உது சட்டியைப் பாத்து பானை கறுப்பு எண்ட கதை மாதிரிக் கிடக்குது...

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் 31இல் பதவி விலகுவார்களா?

– ஈரோஸ் கேள்வி

கிளிநொச்சி, டிசெ.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் மாவீரர்களையும் மண் ணையும்மக்களையும்மதிப்பவர் களாக இருந்தால், எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் அவர்களது எம். பிக்கள்அனைவரும்பதவிவிலக வேண்டும்என ஈரோஸ்அமைப்பு பகிரங்க வேண்டுகோள் விடுத் துள்ளது.

பக்கம் 20 »»

விபத்தில் இறந்தவர்களின் பூதவுடல் அடக்கம்

சாவகச்சேரி சங்கத்தானையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்த பதினொரு பேரில் பத்துப் பேரின் இறுதிக் கிரியைகள் நேற்று களுத்துறையில் இடம்பெற்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரின் பூதவுடல்கள் கஜுகஸ் வந்த மயானத்திலும், மற்றைய மூவரின் பூதவுடல்கள் சியாம் பலகுஹ கென்ன மயானத்திலும் அடக்கம் செய்யப்பட்டன.

35 வயதுக்கு மேற்பட்டவர்களே முச்சக்கரவண்டி செலுத்தலாம்

விரைவில் வருகிறது புதிய சட்டம்

கொழும்பு, டிசெ.20

முச்சக்கரவண்டிசெலுத்துபவர்களுக்கானசாரதி அனுமதிப் பத்திரம்வழங்கும்வயது எல்லையை 35 ஆக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பான திட்டத்தை எதிர்வரும் சில தினங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறை வேற்றிய பின்னர் அதனை சட்ட வரைவுத் திணைக்களத் திற்குச் சமர்ப்பிக்க நடவ டிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பக்கம் 20 »»

நீதிபதிகள் மீது அவதூறு பரப்பும் இணையங்கள் மீது நடவடிக்கை

ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.20

நீதித்துறையினரின் நற் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் பிழையான தகவல்களை வெளியிடும் இணையத் தளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகப் புதிய சட்டம் உருவாக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வத்தளையிலுள்ள நட்சத்திர விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற நீதிபதிகளின் வருடாந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்-

இணையத்தளங்களால் அதிகமாக விமர் சிக்கப்படுபவன் நான் தான். பக்கம் 20 »»

பிரபாகரன் துப்பாக்கியால் கேட்டதை சம்பந்தன் பேனாவால் பெற முயற்சி!

விடமாட்டோம் என கோட்டா அணி ஐப்பானில் சூளுரை

கொழும்பு,டிசெ.20

விடுதலைப்புலிகளின்தலைவர்பிரபாகரன்துப்பாக்கியினால் கேட்டதை சம்பந்தன் பேனாவினால் சாதிப்பதற்கு நாம் ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டோம்எனநாடாளுமன்றஉறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன தெரிவித்தார்.

முன்னாள்பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சகிதம்ஜப்பான்விஜயம்ஒன்றை மேற்கொண்டுள்ள அவர் நேற்றையதினம் அங்கு கூட்டம் ஒன்றில்உரையாற்றும்போதேமேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் –

பிரபாகரனுக்கு யுத்தத்தால் பெற்றுக் கொள்ள முடியாததை சம்பந்தனுக்கு கொடுக்க முடியாது. ஆயுதத்தால் தோல்வியடைந்த ஒரு விடயத்தில் வெற்றியை சம்பந்தன் தற்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

அப்படி ஒரு விடயத்தை சம்பந்தன் சாதித்துக் கொள்ள முடியாது. அதற்கு நாம் இடம் கொடுக்கவும் மாட்டோம் என்பதையும் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம்.

நாடாளுமன்றம் மீண்டும் கூடிய உடனேயே இதற்கான ஆயத்தங்களை நாம் செய்வோம்.

மஹிந்தராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தினரிடம்நாம்கேட்டதுஎமக்கு சுதந்திரத்தையும் வெற்றியையும் பெற்றுத் தாருங்கள் என்பதையே. அவற்றை அவர்கள் பெற்றுக் கொடுத்தார்கள்.

அதற்கும்மேலாகஇராணுவவீரர்கள் தமது உயிரைத் தியாகம்செய்து, தம்மைக்கொடுத்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்கள். அவர்கள்அனைவரும் இப்போது தண்டிக்கப்படுகின்றார்கள்.

இதேவேளைநான்வளர்ந்து வரும்ஓர்அரசியல்வாதி. எனக்கு பல அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. ஆனாலும் 1000 குண்டுகள் துளைத்தாலும் எமது போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்பதை உறுதிபட இங்கேகூறிக்கொள்கின்றோம்.

அது போல புதிய நாடு ஒன்றை அமைப்போம்என்றசபதத்தையும் இங்கேகூறிக்கொள்கின்றோம். எங்கள் பக்கம் இருந்து நீங்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும் – என வும் நிரோஷன் பிரேமரத்ன கேட்டுக்கொண்டார்.

அனல் மின் நிலைய நிர்மாணத்தில் கிட்டிய

சீன நிறுவனத் தரகுப் பணத்தில் ஆஸியில் 4 வீடுகள் கொள்வனவு

சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தை நிர்மாணித்த சீன நிறுவனத்திடம் இருந்து கிடைத்த தரகுப் பணம் மூலம் மின்வலு, எரிசக்தி அமைச்சின்முன்னாள்செயலாளர்ஒருவர்ஆஸ்திரேலியாவில் 4 வீடுகளைக் கொள்வனவு செய்துள்ளார் என ஊழலுக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சட்டத்தரணி நாமல்ராஜபக்ஷகடந்த ஜனாதிபதித்தேர்தலில்ஒருவேட்பாளராகப் போட்டியிட்டவர்.

மேற்படி முன்னாள் செயலாளர் கொழும்பு கிருலப்பனையிலும் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்துள்ளார் எனவும் நாமல் ராஜபக்ஷதகவல்வெளியிட்டுள்ளார்.

மருதானையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்துள்ள இப்படியானகொடுக்கல் – வாங்கல்களுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதால், விசாரணைகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஒரு பகுதியினர் ஜனாதிபதிக்கு மனவருத்தம் ஏற்படும் என்றும் மற்றுமொரு பகுதியினர் பிரதமருக்கு மனவருத்தம் ஏற்படும் என்றும் கூறி இப்படியான விசாரணைகளுக்கு உதவி வழங்காமல் இருந்து வருகின்றனர் எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

அனுராதபுரம் வைத்தியசாலையின் மாடியிலிருந்து பாய்ந்தவர் சாவு!

கொழும்பு,டிசெ.20

அனுராதபுரம்போதனாவைத்தியசாலையின் இரண்டாவது மாடியிலிருந்து பாய்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் பலத்த காயங்களுக்கு மத்தியில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

அனுராதபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்லீரல் கோளாறு காரணமாக இந்த நபர் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சிகிச்சையளிப்பதற்கு அவர் ஆரம்பத்தில் மறுத்திருந்தநிலையில் அவரின் மனநிலை குறித்து சோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

இரணவிலவில் உள்ள

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வின் ஒலிபரப்பு நிலையம் மூடு விழா!

இரணவிலவில் உள்ள, 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையத்தை மூடுவதற்கு, அமெரிக்கா முடிவுசெய்திருப்பதாக,ஆங்கிலஊடகம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு இரணவிலவில் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்புக் கோபுரத்தை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது. எனினும், 1993ஆம்ஆண்டிலேயே இங்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பத்தில் இந்த ஒலிபரப்பு வளாகம், 920 ஏக்கர் கொண்ட, பலத்த பாதுகாப்புமிக்க, இராஜதந்திர விலக்குரிமை பெற்ற பகுதியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும்அந்தப்பகுதிமக்கள் நடத்திய போராட்டங்களால், 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையப் பகுதி 520 ஏக்கர் பரப்பளவுக்குள் குறைக்கப்பட்டது. இந்தப்பிரதேசத்துக்குள் இலங்கையர்கள் எவரும்நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இரணவில ஒலிபரப்பு கோபுரத்தின் மூலம் பிராந்தியத்தின் இராணுவத் தகவல்கள் இரகசியமாகசேகரிக்கப்படுகின்றனஎனவும், இங்கு இரகசிய ஓடுபாதை ஒன்று இருப்பதாகவும் முன்னர் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

இந்த ஒலிபரப்பு நிலையத்தையே மூடுவதற்கு அமெரிக்க முடிவு செய்துள்ளது.

இரணவிலவில் உள்ள ஒலிபரப்பு நிலையத்தை விலக்கிக் கொள்ள அமெரிக்கா முடிவு செய்துள்ளது என்பதை, அமைச்சர் மலிக்சமர விக்கிரம உறுதி செய்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்கா கைவிடவுள்ள இரணவிலபிரதேசத்தில், 5000 ஏக்கர் நிலத்தை தமக்கு வழங்குமாறு சீனா கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

சீன நிறுவனம் ஒன்றே இந்தக் கோரிக்கையை இலங்கை அமைச்சர் ஒருவரிடம் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வான் அலைகளைப் பரிமாற்றம் செய்யும் கேந்திர மையமாக இந்தப் பகுதி இருப்பதாலேயே, இரணவில ஒலிபரப்பு நிலையத்தை உள்ளடக்கிய பிரதேசத்தை சீன நிறுவனம் கோரியுள்ளது.

எனினும், இந்தப் பகுதி நிலத்தை சீனா கோரியிருப்பது பற்றித் தனக்குத் தகவல் தெரியாது என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இரணவிலவில் ஒலிபரப்புக் கோபுரத்தை அமெரிக்கா அமைத்தபோது, இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

எனவே, இந்தப் பகுதியில் நிலத்தைப் பெறும் முயற்சியில் சீனா இறங்கினால் அதற்கு இந்தியாவிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

சட்டவிரோத ஆள்கடத்தலுடன் தொடர்புடைய கடற்படை உயரதிகாரிக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, டிசெ.20

சட்டவிரோத ஆள் கடத்தல்களுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் கடற்படை உயரதிகாரி ஒருவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று குற்றம்சுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத ஆள்களைக் கடத்தும் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்று குற்றம்சுமத்தப்பட்ட கடற்படை லெப்டினன் கமாண்டர் ஒருவருக்கே இவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் 123 படகுகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைத்தார் என்று இவர்மீதுகுற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

கடற்படையின் லெப்டினன் கமாண்டர் நிலை வகிக்கும் அதிகாரிகளுக்கு பிரத்தியேக பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் வழங்கப்படுவதில்லை.

எனினும் இந்த அதிகாரி கடற்படைக்கு எதிரான வழக்கு ஒன்றில் அரச சாட்சியாளராக முன்னிலையாகிய காரணத்தால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் சித்திரவதைக்கூடங்கள்காணப்பட்டன எனக்கூறிஐக்கியநாடுகள்பிரதிநிதிகளுக்கு அந்த இடங்களை இந்த அதிகாரியே காண்பித்திருந்தார்எனவும்தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் கடற்படையினரால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று இந்த அதிகாரி கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளின் பின்னர் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரியின் பாதுகாப்புக்காக இரண்டுகடற்படையினர் கடமையில் அமர்த்தப்பட்டு உள்ளமையுடன், ரீ-56 ரகதுப்பாக்கிகள் இரண்டு, கைத்துப்பாக்கிகள் இரண்டுஆகியனவும்கடற்படையால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அதிகாரி பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றார் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கர்ணகொட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம்முறைப்பாடுசெய்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணைக்குழு ஒன்றின் ஊடாக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

படுகொலைகள், ஊழல் மோசடிகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய

ராஜபக்ஷ குடும்பத்தவர்களை பாதுகாக்கிறது நல்லாட்சி அரசு!

இது மக்களுக்குச் செய்யும் துரோகம் எனச் சாடல்

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசமான படுகொலைகள் மற்றும் ஊழல் மோசடிகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினரை தற்போதைய நல்லாட்சி அரசு பாதுகாத்துவருவதாகநீதியானதும்நியாயமானதுமான சமூகத்துக்கானமக்கள் அமைப்பின்ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய குற்றம்சாட்டியுள்ளார்.

இதன்மூலம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக துணைநின்ற சோபித தேரர் தலைமையிலான மக்கள் அமைப்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அனைத்து நிபந்தனைகளையும் தற்போதைய மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சிஅரசாங்கம்அப்பட்டமாக மீறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற நீதியானதும் நியாயனதுமான சமூகத்துக்கானமக்கள்அமைப்பின் ஸ்தாபகரான அமரர் சோபித தேரரின் நினைவுப் பேருரை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் 2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தபோதிலும், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியமறுநாளேமக்களுக்கு அளித்தவாக்குறுதிகளை ஒவ்வொன்றாக மீறத் தொடங்கியதாக் பேராசிரியர் சரத் விஜேசூரிய குற்றம்சாட்டினார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறியபோது முன்வைத்த 100 நாள் செயற்றிட்டம் ஒட்டுமொத்தமாக ஜக்கிய தேசியக் கட்சியின் தயாரிப்பு என்று கூறிய அவர் தேர்தல் தோல்வியைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஜக்கிய தேசியக் கட்சி முன்வைத்த ஏமாற்றுத் திட்டமே அது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவின் தற்போதைய தேசிய அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதலைமையிலானஜக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலானஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியும்தற்போதுவெளிப்படையாக ஊழல் மோசடிக்காரர்களைப்பாதுகாத்துவருவதுஅம்பலமாகியுள்ளதாகவும் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்தார்.

குறிப்பாக அமரர் டட்லி சேனாநாயக்கவின் உருவச் சிலையைத் திறந்துவைக்கும் நிகழ்விற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுத்தமை ஆச்சரியத்துக்குரிய விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறையில் இருக்கவேண்டிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பிரதமர் அல்லது ஜனாதிபதியே அழைப்புவிடுத்திருக்கவேண்டும் என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், சித்திரவதைகள், சட்டவிரோதமான கைதுகள் மற்றும் காணாமற் போகச் செய்யும் சம்பவங்களுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டிய கோட்டாபய ராஜபக்ஷவை தற்போதைய தேசிய அரசாங்கம் பாதுகாத்துவருவதாகவும் குற்றம்சாட்டிய பேராசிரியர்விஜேசூரிய இதனை நிரூபிப்பதற்கான பல சாட்சிகள் தம்மிடம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

நல்லிணக்கப் பொறிமுறை அறிக்கை நாளை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கலந்தாலோசனைச் செயலணி தகவல் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை நாளை புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது என்று செயலணியின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அதே நிகழ்வில் பங்கேற்றிருந்த செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து, இந்தத் தகவலை ஆமோதித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு-

கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை கடந்த நவம்பர் மாத இறுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் ஜனாதிபதி - பிரதமர் ஆகிய இருவரிடமும் ஒரே தருணத்தில் அறிக்கையைக் கையளிப்பதற்கான பொருத்தமான நேரத்தைப் பெறமுடியாது இருந்தது.

அத்துடன் அறிக்கையை முழுமையாக அச்சிடுவதிலும் தாமதம் ஏற்பட்டது. இவற்றால் முன்னதாக திட்டமிட்ட வகையில் அறிக்கையைக் கையளிக்க முடியவில்லை .

எனினும், தற்போதைய நிலையில் நாளை இந்தச் செயலணி அதன் அறிக்கையைக் கையளிக்கும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாடொன்றும் நடத்தப்படவுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டது.

உண்மை மற்றும் நீதியைக் கண்டறிதல், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தல், அதற்கான இழப்பீடுகளைப் பெறுவதற்கு வழிவகைசெய்தல் போன்ற ஸ்ரீலங்காவின் நல்லிணக்கப் பொறிமுறைகள் மற்றும் வழிவகைகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனைச் செயலணி இவ்வாண்டு ஜனவரி 26 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த நோக்கங்களை அடைவதற்காகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமைக்கான ஆணைக்குழு, விசேட நீதிமன்றத்தை உள்ளடக்கிய நீதிமன்ற பொறிமுறை, இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றை அமைக்க உத்தேசித்துள்ளது என்று அரசாங்கம் ஏற்கனவே தகவல்வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலந்தாலோசனைச் செயலணிவடக்கு, கிழக்குஉட்படநாட்டின் பல பகுதிகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து மக்களின் கருத்துக்களைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

பாடசாலைகளில் மது ஒழிப்பு பிரிவு

கொழும்பு, டிசெ.20

நாடளாவிய ரீதியாக உள்ள 3 ஆயிரத்து 200 பாடசாலைகளில் மது ஒழிப்புப் பிரிவுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதைப் பொருள் பாவனை ஒழிப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணியால் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று செயலணியின் பணிப்பாளர் சமந்த கித்தலவாராச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டம்

கொழும்பு, டிசெ.20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சுதந்திரக்கட்சியின் அனைத்து தொகுதி அமைப்பாளர்களும் கட்டாயமாகச் சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் கட்சி மறுசீரமைப்புக் குறித்து இன்று கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

பண்டிகைக் காலக் குற்றங்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வது தொடர்பில் விசேட திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் போக்குவரத்து பொலிஸ் தலைமையக பிரிவின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சாரதிகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு சிவில் உடையில் பல பொலிஸ் அதிகாரிகளை ஈடுப்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் விடுதிகள் மற்றும் உணவகங்களைக் கண்காணிப்பதற்கும் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொது சுகாதார சேவைகள் ஆய்வாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலத்தில் விடுதிகள் மற்றும் உணவகங்களைக் கண்காணிப்பதற்கு 2 ஆயிரத்து 100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அந்தச் சங்கத் தலைவர் உபுல்ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் மனிதப் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்யும் உணவகங்கள் குறித்து 011-263-5676 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களின் நலன் கருதி அவசர அழைப்பு 24 மணித்தியாலமும் சேவையில் இருக்கும்என்றும்குறிப்பிட்டுள்ளார். ஐ

அமெரிக்காவில் நிதி மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையர் சபாநாயகர் கருவுக்கு நண்பராம்!

கொழும்பு, டிசெ.20

அமெரிக்காவில் நிதி மோசடி தொடர்பில்குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையர், சபாநாயகர் கருஜயசூரிய மற்றும் அவரின் மருமகன் நவின் திஸாநாயக்க ஆகியோருக்கு நெருங்கிய நண்பர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச முதலீட்டு மோசடி திட்டத்தில்றெய்ன்சி எட்வர்ட்ஸ் என்ற இலங்கையர் உட்பட ஆறு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மோசடியில் ஈடுபட்ட எட்வர்ட்ஸ் இந்திய ஆன்மிக குரு இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் கரு ஜயசூரிய மற்றும் நவின் திஸாநாயக்க ஆகியோருடன் காணப்படுகிறார்.

நுவரெலியா குதிரை பந்தயங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் பல சந்தர்ப்பங்களில் பிரதம விருந்தினராக எட்வர்ட்ஸ் கலந்து கொண்டுள்ளார்.

அமெரிக்கா நீதிபதி ஒருவர் இந்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய முதலீட்டாளர்கள் குறித்து அண்மையில் அறிவித்திருந்தார்.

அந்த முதலீட்டாளர்கள் ஆறு பேரும், அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களிடம் இருந்து சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடி செய்துள்ளனர்என்று அமெரிக்கா நீதித்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோசடி 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையான காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொருவர் மீதும் பல பணமோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையால் 20 ஆண்டுகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்த வேண்டாம்

அரசை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றம்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் குர்ஆன் மற்றும் ஹதீஸுக்கு முரணான எந்தவொரு திருத்தங்களும் மேற்கொள்ளப்படக் கூடாது என்று அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றை கொழும்பு மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு மருதானை ஸாஹிரா பள்ளிவாசலில் நடைபெற்ற கொழும்பு மாவட்டப் பள்ளிவாசல்கள் சம் மேளனத்தின் கூட்டத்திலே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று சம்மேளனத்தின் தலைவர் அஸ்லம் ஒத்மான் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தில் 12 பள்ளிவாசல்களின் சம்மேளனங்கள் அங்கம்வகிப்பதுடன் இவற்றில் சுமார் 175 பள்ளிவாசல்கள் உள்ளடங்குகின்றன. இந்தக் கூட்டத்தில் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், சாபிர் ஹாசிம், அஸ்லம் ஒத்மான் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (ஐ)

விஸ்டம்
தொழில்நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 221 7860, 077 248 7774

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கி வரும் கல்வி நிறுவனம். பொறியியல் தொழில்நுட்பம். உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியான வழியைத் தெரிவு செய்து NVQ படநிலை ஊடாக தொழில்நுட்பவியல் பட்டமொன்றுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

குற்றவியல் நீதி ஆணையம் குற்றவாளிகளை மடக்குமா?

கடந்த ஆட்சிக் காலத்தில்இடம்பெற்ற ஊழல்கள்,மோசடிகள், நிதிக் கையாடல்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் போன்றவை தொடர்பான விசாரணைகளை விரைந்து நடத்திமுடித்து, குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்காக விசேட குற்றவியல் நீதி ஆணையம் ஒன்றை நிறுவுவது பற்றிய யோசனை ஒன்றைப் பதினைந்து அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து அமைச்சரவைக்குப் பரிந்துரைத்திருக்கின்றார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடைபெறவில்லை. குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படவில்லை. அவர்கள் சுதந்திரப் பறவைகளாகத் திரிகின்றார்கள்- என்று அரசுத் தரப்புக்குள்ளேயே பலத்த முணுமுணுப்புக் கேட்கின்றது.

ஊழல் முறைகேடுகள், மோசடிகள், நிதிக் கையாடல்கள் போன்ற வற்றில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கூளுரைத்து, அதனைக் காட்டி ஆட்சிப் பீடத்துக்கு வந்தோர், சுமார் இரண்டு வருடங்களாகியும் ஏதும் செய்யாமல் வாளாவிருக்கின்றனர் என்ற கருத்து அரசுக்குள்ளேயே தீவிரமடைந்து வருகின்றது.

அதன் வெளிப்பாடே இந்த யோசனைத் திட்டச் சமர்ப்பிப்பு என்பது வெளிப்படையான உண்மை.

மேற்படி விடயங்கள் தொடர்பில் தாராளமான விசாரணைகள் நடக்கின்றன; புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களமும், நிதிக் குற்றவிசாரணைப் பிரிவும் தனித்தனியாக ஒவ்வொரு புறமும், விசேட குற்றவியல் விசாரணைப் பிரிவு பிறிதொரு புறம்பாகவும் ஆதாரங்களைத் தேடிப்பிடித்து, தரவுகளைத் திரட்டி, சாட்சியங் களைப் பதிவு செய்து, விவரங்களைச் சேகரித்து விசாரணைகளை நடத்தி வருகின்றது.

ஆனால், அதற்கு அப்பால் சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலையில் எதுவும் ஆக்கபூர்வமாக நகர்ந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பின்னடைவைச் சமாளித்து, நீதி விசாரணை வேகத்தைத் துரிதப் படுத்தி, விசாரணைகளை முன்நகர்த்தும் இலக்குடனேயே இந்தக் குற்ற வியல் நீதி விசாரணை ஆணையம் அமைக்கும் யோசனை பிரேரிக்கப் பட்டிருக்கின்றது என்பது ஒப்புக் கொள்ளத்தக்கதே.

1971 இல் தோல்வியில் முடிந்த ஜே.வி.பி புரட்சியின் சூத்திரதாரி களையும் அந்தப் புரட்சிச் சதியின் பின்னணியில் கைது செய்யப்பட்ட பல நூற்றுக் கணக்கானோரையும் துரிதமாக விசாரித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இத்தகைய ஆயம் அமைக்கப்பட்டது. அதன் மாதிரியை ஒத்ததாகவே புதிய ஆணையமும் தற்போது பிரேரிக்கப் பட்டிருக்கின்றது.

நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் பிரதான இரு கட்சிகளையும் - ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டையும் சேர்ந்த அமைச்சர்களுமே இணைந்து இந்த யோசனைத் திட்டத்தில் ஒப்பமிட்டு அதனைப் பிரேரித்து அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருப்பது முக்கிய அம்சமாகும்.

அமைச்சரவையின் பலமுக்கிய பிரபலங்கள் இணைந்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகின்றமையால், இது அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று, அடுத்ததாக சட்டவாக்கல் முயற்சியை நோக்கி நகரும் என்று நம்புவதற்கு தாராளமாக இடமுண்டு.

அப்படி வரும்போதுதான், சில சிக்கல்கள் பூதாகரமாக வெடிக்க இடமுண்டு. உத்தேச குற்றவியல் நீதி ஆணையத்தின் நடைமுறையில் சில விடயங்கள் சிக்கலுக்குரியவை.

முதலாவது - இந்த முறைமையின் கீழ் நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சுமத்தப்பட்டவர் மீது வீழ்கின்றது. குற்றத்தைச் சுமத்தும் அரசுத்தரப்பு மீதல்ல. இந்த முறைமையே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலும் உள் ளது என்பதை நேற்றே இப்பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம். வழமையான இயற்கைநீதி, தார்மீகச்சட்டமுறைமை ஆகியவற்றுக்கு மாறான ஏற்பாடு இது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அந்த முறைமை தமிழ்க் கைதிகளுக்கு எதிராக ஏவிவிடப்பட்டபோது கைகொட்டிச் சிரித்துப் பார்த்திருந்த தென்னிலங்கைத் தரப்பு மீதே அந்த விசேட- வழமைக்கு மாறான - சட்ட முறைமை ஏவிவிடப்படக்கூடிய ஏது நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்து- இந்த ஆயத்தின் தீர்ப்பும், உத்தரவும் இறுதியானது என்பதாகும். அத்தகைய உத்தரவுக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும், எந்த ஆயத்திலும் விண்ணப்பமோ, மனுவோ, முறையீடோ, மேன்முறையீடோ செய்ய முடியாது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பெரும் ஊழல்கள் புரிந்தவர்கள் என்று கூறப்படும் பெருச்சாளிகள், சமர்த்தர்கள் சட்டத்தை வளைத்துப் போடும் சாமர்த்தியம் தெரிந்தவர்கள்.

இத்தகைய இறுக்கமான - திட்டவட்டமான - காலவரையறை தீர் மானித்துக் குறித்தொதுக்கப்பட்ட - தெளிவான ஏற்பாடுகளைக் கொண்ட - ஒரு சட்டக் கட்டமைப்புக்குள் விசாரணைகளைக் கொண்டு வராவிட்டால், அவர்கள் இலங்கைச் சட்ட முறைமைகளை உச்சி, ஏமாற்றி, காதில் பூச்சுற்றிக் கொண்டு, சுதந்திரப் பறவைகளாகத் தொடர்ந்து அரசியலும், நிர்வாகமும் செய்து கொண்டிருப்பர் என்பது நிச்சயம்.

குற்றவியல் நீதி ஆணையமாவது இவர்களை மடக்கிச் சட்டத்தின் முன்கொண்டு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நிதி அமைச்சரின் கருத்து குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்

ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார் பந்துல எம்.பி.

கொழும்பு, டிசெ.20

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக மத்திய வங்கியிலிருந்து ஆயிரத்து 300 கோடி ரூபா பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

" ஆயிரத்து 300 கோடி ரூபா மத்திய வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்ற நிதி அமைச்சரின் குற்றச்சாட்டு பாரதூரமான ஒன்று. இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கியும் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும்.

நிதி அமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டு குறித்த உண்மைகளை மக்களுக்குத் தெளிவூட்டத் தவறினால் 5 ஆயிரம் ரூபா தாள் பயன்பாடு தொடர்பில் பெரும் சர்ச்சை நிலைமை ஏற்படும். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்."-என்றார். (எ)

கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணி ஜனவரியில்!

கொழும்பு, டிசெ.20

கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

"இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிபிட்டார்.

அதற்கமைய மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான இரண்டாம் கட்ட வீதி நிர்மாணிப்புப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம் பிக்கப்படவுள்ளது.

இலங்கை வரலாற்றில் உள் ளூர் ஒப்பந்தக்காரர்களால் அதி வேக நெடுஞ்சாலையை நிர் மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பம்.

இந்த அதிவேக நெடுஞ் சாலையின் முதலாவது கட்டு மாணப்பணிகளை சீன நிறுவனம் ஒன்று ஆரம்பித்துள்ளது.

இதேவேளைகண்டி-கொழும்பு அதிவேக வீதி நிர்மாணப் பணிக்குத் தேவையான காணிகளை தனியாரிடமிருந்து அரசாங்கம் கையேற்றுள்ளது."-என்றார்.

இதேவேளை மற்றொரு நிகழ்வில் அவர் கலந்துகொண்டு தெரிவித்தவை வருமாறு;

"எமது கட்சி கடும்போக்கான கட்சியல்ல . ஆட்சியில் இருக்கும் வரையில் சிறுபான்மையினருக்கு எந்தவித இடையூறும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

நாட்டின் முக்கிய இரண்டு கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள அரசாங்கம் எந்தவகையிலும் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுடன்பேச்சு நடத்தி நாட்டில் பெரியளவில் முதலீடுகள் இடம்பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பலனாக அம்பாந் தோட்டையிலிருந்து மொனறாகலை வரையில் 500 கைத்தொழிற் சாலைகளை அமைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருள்களை சீனா இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்யும்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்தியா குறைவான வரியை அறவிடுவது தொடர்பாக இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கைக்கு பெரியளவில் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். சீன அரசாங்கம் மேற்கொள்ளும் முதலீடுகள் மூலம் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பம் கிட்டவுள்ளது.

இவ்வாறானவேலைத்திட்டங்களைச் சீர்குலைப்பதற்கு சில சக்திகள் முயன்றபோதிலும் அரசாங்கம் எதிர்காலத்திட்டத்தில் தடை ஏற்படுத்துவதற்கு இடமளிக்காது."-என்றார். (எ)

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தாவிட்டால் வரி அறவீட்டைப் புறக்கணிப்போம்!

தேச விமுக்தி ஜனதாக்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கள் நடத்தப்படா விடின் அவற்றுக்கான வரி அறவீட்டை புறக்கணிக்கப் போவதாக தேசவிமுக்தி ஜனதாக் கட்சித் தலைவர் சங்கைக்குரிய கலகம தம்மரன்சி தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு;

'மக்கள்விடுதலை முன்னணி இப்போது அரசாங்கத்துக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டி எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றது.

ஆனால், முதலில் இந்த ஆட்சி மாற்றத்துக்கு காரணமாகவும், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகவும் செயற்பட்டவர்களே இவர்கள்."-என்றார். (எ)

விசேட கொடுப்பனவு வழங்குமாறு அரச பஸ் பணியாளர் கோரிக்கை

கொழும்பு, டிசெ.20

தனியார் பஸ் தொழிற்சங்க நடவடிக்கையின் போது சேவையில் ஈடுபட்ட அரச பஸ்பணியாளர்களுக்கு விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதியிடம் இலங்கை போக்குவரத்துச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

போக்குவரத்து சபையினரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

பஸ் பணியாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2 ஆம் திகதி தனியார் பஸ் உரிமையாளர்களால் நாடளாவிய ரீதியிலான தொழிற்சங்க நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த தொழிற்சங்க நடவடிக் கையின்போது, இலங்கை போக்குவரத்துச் சபை 110 மில்லியன் ரூபாய்களை இலாபமாகப் ஈட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்ற மூவர் கைது

ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா பெறுமதியான வெளி நாட்டு நாணயங்களைக் கட்டார் நாட்டுக்குக் கடத்திச் செல்ல முயன்ற 3 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எகிப்து, லெபனான் மற்றும் பலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் களாவர்.

கைது செய்யப்பட்டவர் களின் பயணப்பையை மற்றும் ஆடைகளில் அமெரிக்க டொலர்கள் மற்றும் யூரோ நாணயத்தாள்கள் மறைத்து வைத்து கடத்திச் செல்ல முயன்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுபின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (எ)

நாளை

21.12.2016
புதன்கிழமை
திதி : அட்டமி பின்இரவு 12.23 வரை
நட்சத்திரம்: உத்தரம் முன்னிரவு 8.28 வரை
சுபநேரம் : 4.54 - 6.24
இராகுகாலம் : 12.24 - 1.54

பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு எதிர்ப்பு கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்பு!

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிப்பு

மீள்குடியேற்ற அமைச்சால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களால் கவன வீர்ப்பு போராட்டம் நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் முன்பாக நடை பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய் யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சால் 65 ஆயி ரம் பொருத்து வீடுகளை நிர் மாணிக்க அரசு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த நிலையில், பயனாளி களும் மக்களும் பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தத் திட்டத் துக்கு எதிராக முதன் முறையாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, 'மீள்குடியேற்றத்திலும் சர்வாதி காரமா?', 'விளையாடாதே விளை யாடாதே வீட்டுத் திட்டத்தில் விளையாடாதே', 'வேண்டாம் வேண்டாம் பொருத்து வீடு வேண்டாம்' ,, 'குசுனி இல்லாத வீட்டில் குடியிருக்கலாமா?', '16 லட்சத்தில் பலகை வீடா?', 'மக்களின் விருப்பமா மந்திரியின் ஆசையா?' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் கவனவீர்ப்பு போராட் டத்தில் பங்குகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் 35 ஆயிரத்து 452 புதிய வீடுகளும், 6 ஆயிரத்து 179 வீடுகள் திருத்த வேண்டிய நிலையிலும் காணப்பட்டன.

இதில் கடந்த ஆண்டுவரை அரச, அரச சார்பற்ற மற்றும் இந்திய அரசின் வீட்டுத்திட்டம் என 20 ஆயிரத்து 714 புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்னும் 14 ஆயிரத்து 738 புதிய வீடுகள் கிளிநொச்சிக்குத் தேவையாக உள்ளன. ஆயிரத்து 441 வீடுகள் திருத்த வேண்டிய நிலையில் உள்ளன.

மாவட்ட செயலகப் புள்ளி விவரத் தகவல்கள் மூலம் அதை அறிய முடிகிறது.

கடந்த ஏழு ஆண்டுகளாக இவர்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்க ளுக்குப் பொருத்து வீடுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இதனால் பொருத்து வீடுகள் தமது சூழலுக்குப் பொருந்தாது என்று கிளிநொச்சி மாவட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். தமது வாழ்க்கை முறை, தமது பிரதே சத்தின் காலநிலை, பாரம்பரிய கட்டட முறை என்பவற்றைக் கருத்தில் கொண்டு வீடுகளை அமைத்துத் தருமாறும் அவர்கள் வலியு றுத்தியுள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கான மகஜர்களை கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாய கத்திடம் கையளித்தனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட் சித் தலைவருமான இரா.சம்பந் தன், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர் சிவஞானம் சிறிதரன் ஆகியோருக்கான மகஜர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறி தரனிடமே வழங்கினர்.

(ஐ-70-81)

சிறுவர்களது பாதுகாப்பு விடயத்தில் பெற்றோரின் பொறுப்பு அவசி யம்

சிறுவர் நன்னடத்தை பிரிவினர் அறிவுறுத்து

முல்லைத்தீவு, டிசெ.20

சிறுவர்களைப் பாதுகாப்ப தில் பெற்றோர், பாதுகாவலர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று முல்லைத் தீவு சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் அறிவுறுத்தியுள் ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித் துள்ளவை வருமாறு-

நாட்டில் பல்வேறு பகுதிக ளில் சிறுவர்கள் மீது துஷ் பிரயோகங்கள் தொடர்ச் சியாக இடம்பெற்று வருகின் றன.

இந்த நிலையில் முல் லைத்தீவு மாவட்டத்தில் சில சிறுவர்கள் கவனிப்புக் குறைவுடன் நடமாடுவதைக் காணமுடிகிறது.

முல்லைத்தீவு மாவட்டம் பெருநிலப்பரப்பைக்கொண் டிருப்பதால் சில அத்தியாவசி யத் தேவைகளுக்காகக் கிரா மத்து மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிலையில் அத்தி யாவசியப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்குச் சிறுவர்களைப் பெற்றோர் பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் நீண்ட தூரத்தைக் குறுகிய தூரமாக் குவதில் சிறு[illegible]கள் முயற் சிக்கின்றனர்.

இதனால் அவர்கள் ஆபத் தான காட்டுப் பாதைகள் மற்றும் பற்றைகள் நிறைந்த பகுதிகளால் பயணிக்கின் றனர்.

இவ்வாறான பாதைக ளைக் குறித்த சிறுவர்கள் பயன்படுத்துவதால் பல் வேறுபட்ட ஆபத்துக்கள் அவர்களுக்கு ஏற்படலாம்.- என்று கூறினர்.

(ஐ)

லசந்த கொலை தொடர்பில்

முன்னாள் இராணுவத் தளபதி அழைக்கப்பட்டு விசாரணை!

கொழும்பு, டிசெ.20

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதியிடம் விசா ரணை நடத்தப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தற்போது பிரேஸிலின் இலங் கைக்கான தூதுவராகக் கடமை யாற்றி வரும் முன்னாள் இரா ணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜ ய சூ ரி ய இ ல ங் கை க் கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி நேற்றுக் காலை ஜகத் ஜயசூரிய குற்றப் புல னாய்வுப் பிரிவில் முன்னிலை யானார்.

லசந்த கொலை தொடர்பில்

இதற்கு முன்னதாகவும் இரா ணுவ அதிகாரிகள், உத்தி யோகத்தர்களிடம் விசாரணை நடத் தப்பட்ட போதிலும் இந் தச் சம்பவம் தொடர்பில் விசா ரணை நடத்தப்படும் அதி உயர் இராணுவ அதிகாரி ஜகத் ஜயசூரிய என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ)

800 போதை மாத்திரைகளுடன் சிக்கினர் ஒருவர்!

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் பிரதேசத்தில் வைத்து 800 போதை மாத்திரைகள், 100 மில்லிகிராம் கஞ்சா ஆகியவற்றுடன் நேற்று அதிகாலை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச)

சட்டவிரோதமாக மீன்சாரம் பெற்ற நால்வர் கைது!

திருகோணமலை,டிசெ.20

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பூவரசந்தீவுக் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற நால்வரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

மின்சார சபை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் மின்மானிகளில் மாற்றங்களைச் செய்து மின்சாரம் பெற்றமை தெரியவந்துள்ளது. (ச)

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தல்; உலக வங்கி பிரதிநிதிகள் குழு ஆராய்வு

கிழக்குக்கு நேற்று வருகை தந்த அவர்கள் முதலமைச்சர் குழுவினருடன் சந்திப்பு

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தி அதிக வருமானங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும், அதனூடாக உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணித் தரத்தை மேம்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாணத்துக்கு நேற்று விஜயம் செய்த உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு கிழக்கு மாகாண சபை அதிகாரிகளுடன் இணைந்து இது தொடர்பாக ஆராய்ந்தனர்.

திருகோணமலையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது. முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை அடுத்தே இந்த விடயம் தொடர்பாகப் பேசப்பட்டது.

உலக வங்கியின் தெற்காசியாவுக்கான நடவடிக்கை அதிகாரி யாரிஸ்ஸா லிங்டோஹ் சொம்மர் , உலக வங்கியின் நகர அபிவிருத்தி தொடர்பான நிபுணர் ஜெசிக்கா ரேசல் மற்றும் பொருளாதார பேராசிரியர் ப்ரையன் எச் ரொபர்ட்ஸ் கிழக்கு மாகாண அமைச்சர்களான எஸ் தண்டாயுதபானி, க.துரைராஜசிங்கம், ஆரியவதி கலப்பதி ,மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நிதியுதவியுடன் உலக வங்கியால் வடக்கு மற்றும் கிழக்கில் முன்னெடுக்கப்படும் நெல்சிப் திட்டத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் தொடர்பாக முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் எடுத்துரைத்தார்.

கிழக்கில் தொழிற்பேட்டைகளை அமைத்து அதனூடாக பிராந்தியத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளல், கிழக்கு மாகாணத்தின் உல்லாசத் துறையை மேம்படுத்தல் மற்றும் விவசாயத்துறையின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்படும் செயற் திட்டங்கள் ,மாகாணங்களுக்கான அதிகாரப்கிர்வு,காணி அதிகாரம் ஆகியனபற்றியும் அங்கு கலந்துரையாடப்பட்டன. (இ-ச)

ஒரு சமூகத்தின் அவலத்தை இன்னொரு சமூகம் புரிந்தால் மட்டுமே விடுதலை சாத்தியமாகும்

சமாதான சமூகப்பணி அமைப்பின் இணைப்பாளர் கருத்து

கல்முனை,டிசெ.20

எந்தக் காலங்களிலெல்லாம் உரிமைக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவோ அந்தக் காலங்களிலெல்லாம் அவற்றை மழுங்கடிப்பதற்கான பல்வேறு யுத்திகள் எதிர்த்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை வரலாறு. எப்போது ஒரு சமூகத்தின் - இனத்தின்- அவல நிலையை இன்னொரு சமூகம் புரிந்து கொள்கின்றதோ அப்போது தான் அந்தப் போராட்டம் உண்மையான உரிமைப் போராட்டமாக மாறும்.

-இவ்வாறு உண்மை நல்லிணக்கத்துக்கான செயற்குழு உறுப்பினரும், சமாதான சமூகப் பணி அமைப்பின் தேசிய இணைப்பாளருமான ரீ.தயாபரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை க்ல்முனை கிறிஸ்தா இல்லத்தில் 'மனித உரிமை செயற்பாட்டுக்கான நிலை மாறு கால நீதியும், நல்லிணக்க செயற்பாடுகளும்' எனும் தொனிப் பொருளில் மாவட்ட மட்ட அமர்வு நடைபெற்றது. அங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1948 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இலங்கை அரசு பல்வேறுபட்ட போராட்ட வடிவங்களைச் சந்தித்து இருக்கின்றது. அந்த வகையில் இனங்களுக்கு இடையேயான போராட்டம், ஜே.வி.பி. தலைமையிலான புரட்சி மற்றும் தமிழ் இயக்கங்களுக்கு இடையேயான போராட்டம், மலையகத்தை மையப்படுத்திய தொழிலாளர் போராட்டம், இடதுசாரிகளது போராட்டம் எனப் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இதுவரை நடந்த போராட்டங்களுக்கு விடுதலை கிடைத்ததா?

இந்த நாட்டிலே 30 வருடயுத்தம் நடந்தது. விடுதலைக்குப் பதிலாக இழப்பையே சந்தித்துள்ளோம். அந்த இழப்பில் இருந்து வெளியே வருவதென்பதும் சிக்கலாகவே இருந்து வருகின்றது. நாம் அனைவரும் யுத்தத்தின் நேரடிச் சாட்சிகளாகவும் பங்காளிகளாகவும் இருந்திருக்கின்றோம் என்பது நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும்.

எங்களது உரிமைக்காகப் போராடுகின்ற அதேவேளை நாங்கள் ஓர் எதிரியை உருவாக்கி விடுகின்றோம். நாங்கள் எந்தப் போராட்டத்தை முன்னெடுத்தாலும் அதற்கு எதிரான பகுதியினர் இருப்பதன் காரணமாகத்தான் நாங்கள் போராட வேண்டிய தேவை இருக்கின்றது.

அண்மையில் இந்த நாட்டிலே தோட்டத் தொழிலாளர்களது சம்பள உயர்வு தேவை கருதி போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தில் கூட யார் வெற்றிபெற்றார்கள் என்றால் தோட்டத் தொழிலாளர்கள் அல்லர், மாறாக முதலாளி வர்க்கமே வெற்றி பெற்றிருக்கின்றது .-என்றார். (ச)

தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காகவே தமிழ்க் கூட்டமைப்பு போராடி வருகிறது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.20

தமிழர்களாகிய நாம் சுய நிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே எமது அபிலாஷையாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும். சமஷ்டி ஏற்பட வேண்டும். நாம் பிரிக்கப்படாத நாட்டுக்குள் மீளப் பெற்றுக் கொள்ள முடியாத அதிகாரப் பரவலாக்கலைத் தீர்வாக வேண்டுகின்றோம். இவற்றை நல்லாட்சி அரசு எமக்குத் தரவேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போராடுகின்றது. அதற்காக எத்தனை விட்டுக் கொடுப்புகளைச் செய்வதற்கும் தயாராக உள்ளது.

-இவ்வாறு கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

கல்லாறு மத்திய விளையாட்டுக்கழகத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு பெரியகல்லாறு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒற்றையாட்சி என்றால் தமிழர்கள் எதிர்க்கின்றார்கள். சமஷ்டி என்றால் பெரும்பான்மை இனத்தவர்கள் அஞ்சுகின்றனர். இவை இரண்டையும் தவிர்த்துப் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதன் மூலம் ஆட்சியைக் காப்பாற்ற முடியும் என்று அரசு நினைக்கின்றது.

ஒற்றையாட்சியே கொண்டு வரப்பட வேண்டும் என்பதுடன் வேறு எதையும் ஏற்கமாட்டோம் என்று பெரும்பான்மையினக் கட்சிகள் கூறுகின்றன. சமஷ்டியை ஏற்க முடியாது என்றும் கூறுகின்றன.

30 வருடகால யுத்தத்தின்போது நாம் இழந்தவை ஏராளம். தற்போதைய நல்லாட்சியில் நாம் இழந்தவைகளைப் பெற வேண்டும். எமக்கான தீர்வை இந்த அரசு மூலம் நாம் எப்படியாவது பெற்றுவிட வேண்டும். இதற்காகப் பல விடயங்களைச் சகித்து வருகின்றோம். கொண்டு வரப்படவுள்ள அரசமைப்பானது தமிழர்கள் இந்நாட்டில் சுய நிர்ணய உரிமையுடன் வாழும் நிலைமையை உருவாக்க வேண்டும்.-என்றார். (ச)

மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டுச் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வெ.தவராசா மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், அரச சார்பற்ற பிரதிநிதிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பலர் சட்டவிரோதச் செயல்கள் புரிந்தனர்

எம்மைச் சுற்றி இருந்தவர்கள் ஏமாற்றினர் வருத்தப்படுகின்றார் மஹிந்தவின் அண்ணன் சமல்

கொழும்பு,டிசெ.20

ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் தவறான முறையில் சட்ட விரோத வேலைகளைச் செய்தவர்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இருந்தனர் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர்கள் அதிகமான அதிகாரங்களைக் கொண்டிருந்த நபர்கள் என்பதால், அவர்களுக்கு எதிராகத் தன்னால் கூட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்பட்டது என வும் அவர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு முன்னாள் சபாநாயகர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

அதிகாரம் இருக்கும் போது குறைகள் தெரிவதில்லை

அதிகாரம் கைகளில் இருக்கும் போது எமது குறைகள் கண்ணுக்குத் தெரிவதில்லை. ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படாத சம்பவங்கள் பல நடந்தன.

எமக்கு மிகவும் நெருக்கமான ஆதரவாளர்கள் பலரின் வீடுகளுக்குச் சென்றேன். அவ்வாறு சென்ற வேளையில் எமது தவறுகளைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அதிகாரத்தில் இருக்கும் போது தவறுகளும் குறைகளும் தெரிவதில்லை. அதேபோல் நாம் மிகவும் ஏமாற்றப் பட்டுள்ளோம். எம்மைச் சுற்றியிருந்தவர்கள் எம்மை ஏமாற்றினர்.

எம்மைவிட அதிகாரம் படைத்தவர்கள் அவர்கள்

சட்டவிரோத தவறான வேலைகளைச் செய்தவர்கள் இந்த மாவட்டத்தில் இருந்தனர் என்பதை நான் அச்சமின்றிக் கூறுகின்றேன்.

என்னால் கூட அவர்களுக்கு எதிராகச் செயற்படும் சந்தர்ப்பம் இருக்கவில்லை என்பதையிட்டு நான் வருத்தமடைகின்றேன். அவர்கள் எம்மைவிட அதிகாரம் படைத்தவர்கள்

இதனால் பாதிக்கப்பட்டது அவர்கள் அல்லர். மஹிந்தவும் எமது அரசும் நாமுமே பாதிக்கப்பட்டோம். இவற்றை நாம் திருத்திக் கொள்ள வேண்டும்.- என்றார். (இ-ம)

இலத்திரனியல் பஸ் சேவையும் அடுத்த வருடத்தில்!

கொழும்பு,டிசெ.20

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள மின்சாரத்தில் இயங்கும் இலத்திரனியல் பேருந்து சேவைகளை அடுத்த வருட தொடக்கத்தில் நடைமுறைப்படுத்த உள்ளனர் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக இலங்கை போக்குவரத்துச் சபை 5000 பேருந்துகளையும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் 500 பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்த உள்ளது என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறியுள்ளார்.

இதற்காக புதிய வழித்தட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா எனவும் ஏற்கனவே அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்கள் மூலம் பேருந்துகளைப் பெற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

மண்டைதீவு வழியில் பிள்ளையாருக்கு அபிஷேகம்

மண்டைதீவு,டிசெ.20

புனருத்தாரணம் செய்யப்பட்ட மண்டைதீவு வழியில் பிள்ளையார் ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வு அண்மையில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

மண்டைதீவின் நுழைவாயிலில் மானோடை எனப்படும் புனித மான் ஓடைக் கடற்கரையில் 'ஏழுகண்' பாலத்தை அண்மித்து அமைந்துள்ள இச்சிறிய ஆலயத்தின் விநாயகர் இந்தக் கிராமத்தின் காவல் தெய்வம் என்பது ஊர் மக்களின் நம்பிக்கை.

இந்த ஆலயத்தின் புனருத்தாரண மூல விக்கிரகத்தின் பிரதிஷ்டையும்; அபிஷேகமும் அண்மையில் நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாகவே சங்காபிஷேக நிகழ்வும் பொங்கல் வழிபாடும் இடம்பெற்றன.

இந்தக் கோவில் கட்டடம் திருத்த வேலை செய்யப்பட்டு காணாமல் போன மூலஸ்தான விக்கிரகத்துக்குப் புதிய விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

முன் மண்டபத்தில் குந்துகள் செய்யப்பட்டு முதியவர்கள் இருந்து வழிபாடு இயற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.(இ-20)

திருவாசகம் முற்றோதல்

பளை,டிசெ.20

பளை, இரட்டைக்கேணி கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

2017 ஐ வாசிப்பு ஆண்டாக மாற்றத் திட்டம்

2017 அம் ஆண்டை வாசிப்பு வருடமாக்கி மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. இதனால் எமது சந்ததியினர் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

மாணவர்கள் மட்டத்தில் இருந்தே வாசிப்பு ஆற்றலை உட்புகுத்த முடியும். தேடல் என்பது மாணவர்களுக்கு அவசியமான ஒன்றாக உள்ளது.

வாசிப்பின் ஊடாக பூரண மொழியறிவுள்ளவராக மாணவர்களை - எமது சந்ததியினரை மாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

இந்த நிலையில் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அறிவாற்றலைப் பெருக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.- என்றார்.(ஐ)

நேரம் போதாமையைக் காரணம் காட்டி சமுதாயத்தைக் கவனிக்க மறுக்கிறோம்

வடமாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

நேரம் போதவில்லை என்ற காரணத்தைக் கூறி எம்மையும், எமது குழந்தைகளையும், சமூகத்தையும் சரியாக வழிநடத்தத் தவறுகின்றோம். எமது சமுதாயத்தை வழிநடத்தும் பொறுப்பு ஒவ்வொருவர் கைகளிலேயும் தங்கியுள்ளது.

வடமாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி வ. மதுமதி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா கந்தர்மடம் சைவப் பிரகாசவித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு-

''ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு'' என இயேசு நாதர் கூறியுள்ளார். ஆனால், எம்மில் எத்தனை பேரால் இவ்வாறு செய்ய முடியும்? இவ்வாறான பக்குவம் எம்மில் உருவாகுவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

இந்தப் பக்குவத்தைப் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறுவயதில் இருந்தே ஊட்டி வளர்க்க வேண்டும்.

பிள்ளைகள் சொல்வதைப் பெரியவர்கள் கேட்கும் சமூகமாக எமது சமூகம் மாற்றமடைந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். நிச்சயமாகப் பெற்றோர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் இருந்தே பிள்ளைகளுக்கான நல்ல பழக்கவழக்கங்களைச் சரியான வகையில் கற்றுக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை.

கடந்த காலங்களில் நேரம் போதவில்லை என்ற வார்த்தை எம்மத்தியிலிருந்து வருவதில்லை. எமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை எவ்வாறு செலவழிக்கலாம் என்று சிந்திக்கும் நிலை காணப்பட்டது.

ஆனால், தற்போது எல்லோரும் தங்களுக்கு நேரம் போதவில்லை என்று கூறிக் கொண்டு நாம் எம்மையும், எமது குழந்தைகளையும், சமூகத்தையும் சரியாக வழி நடத்தத் தவறுகின்றோம்.

எமது சமூகத்திலுள்ள முதியவர்கள் தம்முடன் கதைப்பதற்கு யாருமில்லையே என்று ஏங்கும் ஒரு நிலைமையும் தற்போது காணப்படுகின்றது.

முதியவர்கள் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவோ, குழந்தைகள் அதனை ஏற்றுக் கொள்ளவோ ஏற்றதொரு சூழலில்லாமல் எமது வாழ்க்கை முறை மாறிச் செல்கிறது.

எனவே, இந்த இடைவெளியைப் போக்குபவர்களாகப் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் விளங்க வேண்டும்.

முதியவர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான அன்புப் பாலத்தை உருவாக்க வேண்டியவர்களாக பெற்றோர்கள் காணப்பட வேண்டும்.- என்றார்.(ஐ)

தொடரும் சீரற்ற மழை வீழ்ச்சியால் வவுனியாவில் நெற்செய்கை பாதிப்பு

கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.20

சீரற்ற மழை வீழ்ச்சியால் வவுனியா மாவட்ட நெற் செய்கை கடும் பாதிப்படைந்துள்ளது என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் நெற்செய்கை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

வவுனியா மாவட்டத்தில் இந்த முறை மானிய உரத்துக்காக 45 ஆயிரத்து 683 ஏக்கர் விவசாய காணிகளில் செய்கை மேற்கொள்ள எமது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சீரற்ற மழை வீழ்ச்சி காரணமாக இதுவரை 22 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்களில் மாத்திரமே செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

நீர் பற்றாக் குறையால் பலர் இன்னும் நெற் செய்கை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இவ் வாறானவறட்சிகாலநிலை நீடிக்கும் பட்சத்தில் செய்கை பண்ணப்பட்ட விவசாய நிலங்களில் 10 ஆயிரம் ஏக்கர் வரை அழிவடையக் கூடிய நிலைமையுள்ளது.

இந்த வறட்சி தொடர்ந்தும் நீடிக்கும் பட்சத்தில் நீர் பாய்ச்சுவதன் மூலம் வெறும் 8 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையை மட்டுமே காப்பாற்றக் கூடியதாக இருக்கும்.

நெற் செய்கை மேற் கொண்டு அழிவை எதிர் கொண்டுள்ளவர்கள் தங்கள்பிரிவுகமக்கார அமைப்புக்கள் ஊடாக பதிவு செய்தால் எதிர்காலத்தில் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.-என வும் தெரிவித்தார்.(ஐ-100)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் க.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா,சிவசக்தி ஆனந்தன், வடமாகாண கல்வி அமைச்சர் த. குரு குலராஜா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வடமாகாண சபைப் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான இ.ரவிகரன், சிவனேசன், ஜெனோபர் மற்றும் அரச அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-81)

பூநகரிப் பிரதேச மக்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி, டிசெ.20

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஊடாக பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களான விளையாட்டு உபகரணங்கள், இசைக் கருவிகள், போட்டோ பிரதி இயந்திரம், கதிரைகள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு மொத்தமாக 2.1 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். இதில் 1.1மில்லியன் ரூபா கட்டுமான வேலைத் திட்டங்களுக்காகவும் ஒரு மில்லியன் ரூபா உபகரணங்கள்கொள்வனவுக்காகவும்பயன்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் வேழமாலிகிதன், கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சுரேன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பிரதேச செயலகக் கணக்காளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)



மந்துவில் இராணுவக் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் போர்த் தளபாடங்கள் அனைத்தும் கடந்த மாதம் 24 ஆம் திகதி அகற்றப்பட்டு, புதுமாத்தளன் பிரதேசத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் காட்சியறை இருக்கும் இடத்தைக் குறிக்கும் குறியீட்டுப் பலகை ஒன்று முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் சந்தியில் இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அனைவரும் சென்று பார்க்கும் வகையில் விடுதலைப் புலிகளின் போர் படகுகள் மற்றும் கனரக ஆயுதங்கள் தயார் நிலையில்உள்ளனஎன்று தெரிவிக்கப்படுகிறது.

புதுமாத்தளன் காட்சியகத்தில் புலிகளால் தயாரிக்கப்பட்ட போர்ப் படகுகள் மற்றும் கனரக ஆயுதங்கள் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்டநிலையில்மீளவும்அவ்வாறே காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விசேட தேவையுடையோர் தினம்

வவுனியா, டிசெ.20

சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தின நிகழ்வுகள் வவுனியாவில்நேற்றுஇடம்பெற்றன.

மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முதலாவது கட்டமாக வவுனியா பிரதான பேருந்து தரிப்பிடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் விசேட தேவையுடையோர் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பாக வெளிப்படும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில்விசேடதேவைக்குட்பட்டோருக்கான ஆசனங்களை ஒதுக்கி அவற்றை அடையாளப்படுத்தி ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து வவுனியா நகர் ஊடாக விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசேட தேவையுடையோரின் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலைநிகழ்வுகள், வினாடி வினாப் போட்டிகள், நடனங்கள் எனப் பல்வகை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாணத்தில் சபைஉறுப்பினர் ரி.லிங்கநாதன், வடமாகாண சமூக சேவைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் முகுந்தன், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)



2017 இல் அரசியல் நடவடிக்கைகளை வீச்சாக்கத் தமிழர்கள் திடசங்கற்பம்!

நல்லாட்சியின் பெயரில் கபட நாடகமாடி உலகைத் தனது பக்கம் வளைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் மைத்திரி-ரணில் அரசின் முகத்திரையைக் கிழித்தெறியும் அரசியல் நடவடிக்கைகளை வீச்சாக்குவதற்குத் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பதினாறாம் ஆண்டு நினைவு நாளில் பிரித்தானியத் தமிழர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இதற்கான அரசறிவியல் ஆய்வரங்கம் கடந்த 14.12.2016 புதன்கிழமை லண்டன் Rayners Lane பகுதியில் நடைபெற்றது.

அரசறிவியலாளர் கலாநிதி ர.சிறீஸ்கந்தராஜாவின் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில் முதலாவது அமர்வாகப் பாலா அண்ணையிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் பற்றிய கருத்தாடல் நடைபெற்றது.

இதன்போது முதன்மை உரைகளை மூத்த போராட்டவாதியும், அரசியல் விமர்சகருமான ச.ச.முத்து, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கோபி சிவந்தன் ஆகியோர் ஆற்றினர்.

கருத்துரைகளை இளம் அரசியல் செயற்பாட்டாளர் லக்சன், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மூத்த செயற்பாட்டாளர் பாவரசன், ஊடகவியலாளர்களான கோபி ரட்ணம், கண்ணன், கே.வி.நந்தன், வேல் தர்மா ஆகியோர் ஆற்றினர்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற Rayners Lane தொகுதி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் சொஃவ்ஷ் நொரிஷ் கருத்துத் தெரிவிக்கையில்:-

தனியரசுக்கான தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தான் உறுதுணை நிற்பார் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து 'மாற்றம் காணும் உலக ஒழுங்கும், தமிழர்களின் உரிமைப் போராட்டமும்' என்ற தொனிப் பொருளின் கீழ் இரண்டாவது அமர்வு நடைபெற்றது. இதன்போது முதன்மை உரைகளைத் தாராண்மை சனநாயக கட்சிக்கான தமிழ்ச் செயற்பாட்டாளர் அ.அரசன், தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் அமைப்பின் தலைவர் சென் கந்தையா ஆகியோர் ஆற்றினர். சிறப்புரையை அரசறிவியலாளர் கலாநிதி சுதா நடராஜா ஆற்றினார்.

தொடர்ந்து கருத்துரைகளை மூத்த ஊடகவியலாளரும், நாடகப் பேராசானுமான ஏ.சீ.தார்சீசியஸ், ஊடகவியலாளர்களான சி.பிறேம், இ.தயானந்தா, ரவிசங்கர், குணா ஆகியோர் ஆற்றினர்.

இதனைத் தொடர்ந்து பார்வையாளர்களின் பங்கேற்புடன் விவாதம் நடைபெற்றது. நிகழ்வின் நிறைவாக 2017 ஆம் ஆண்டுக்கான அரசியல் நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனை நடைபெற்றது. (ஐ)

பிரிட்டனில் வணக்க நிகழ்வு



'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு P Positive Network Center,Mitcham CR4 3JRஎன்னும் இடத்தில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

முதலில் ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு மக்களால் மலர்வணக்கமும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தனது வாழ்க்கையை, தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்த பாலா அண்ணாவின் வாழ்க்கைப் பயணத்தையும், தமிழ் மக்களின் விடுதலைக்கான தனது பயணத்தில், தனது வாழ்க்கைத் துணையையும் பங்காற்ற வைத்த அவரது முழுமையான தேசப் பற்றுதலையும், புலம்பெயர்ந்து வாழும் இளைய தலை முறைக்கு எடுத்துச்சொல்லும் உரைகள் இடம்பெற்றன. இதனையடுத்து கவிதை நிகழ்வும் தொடர்ந்து தேசத் தின் குரல் பாலா அண்ணனின் சாதனைகள் பற்றிய நினைவு மீட்டல் உரைகளும் இடம்பெற்றன. (ஐ)

தேசத்தின் குரல் நினைவு நிகழ்வு நோர்வேயில்!

14.12.16 அன்று தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத் தின் நிகழ்வு மிகச் சிறப்பாக நோர்வேயில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் மண்ணின் விடுதலைக்காக அயராது உழைத்த தேசத்தின் குரலுக்கு மலர் வணக்கம் செலுத்தினர். (ஐ)

போட்டி வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. தமிழ்க் கலைக் கூடங்கள் மற்றும் நடனக் கலை பயில்வோர் தமது கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக்கில் 150 இற்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றினர்.

ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு, அதிமேற் பிரிவு என வயதுப் பிரிவுக்கு ஏற்ப பிரிக்கப்பட்டுத் தனிநடனம், குழுநடனம் எனப் போட்டிகள் நடத்தப்பட்டன.

அரங்கு நிறைந்த பார்வையாளர் களின் மத்தியில் வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த மாபெரும் நடனப் போட்டியில் பங்கு பற்றிய அனைத்துக் கலைஞர்களுக்கும் சான்றிதழும், பதக்கமும் வழங்கப் பட்டன. வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு விருதுகளும், அதி சிறந்த நடனக் கலை ஞர்களுக்கு வயதுப்பிரிவுப்படி வாகைமயில் விருதும் வழங்கப்பட்டன. (ஐ)

ஜேர்மனியில் நடனக் கலை பயில்வோருக்குக்களம்அமைத்துக் கொடுத்து, அவர்களது திறமை களை வெளிக்கொண்டுவரும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் வாகைமயில் என்னும் மாபெரும் பரத நாட்டிய நடனப் போட்டி இடம்பெற்றது.

கடந்த 10 ஆம் திகதி வூப் பெற்றால் நகரில் வூப்பர் மண்ட பத்தில் தமிழ் பெண்கள் அமைப் பால் ஒழங்கு செய்யப்பட்டு இந்தப்

இலங்கைத் தமிழ் பாடகியின் குரல் தென்னிந்திய சினிமாவில்!

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழ் பாடகி ஒருவர் தென்னிந்திய திரையுலகின் பிரபலமான இசை யமைப்பாளர்களில் ஒருவரான டி.இமானின் இசையில் முதல் தட வையாக முழுப்பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

இந்தப் பெருமையைப் பெறு பவர் ரொறன்ரோவில் பிறந்து வளர்ந்தகனடியத்தமிழ்பாடகியான லக்ஷ்மி சிவனேஸ்வரலிங்கம்.

இந்தப் பாடல் ஒலிப்பதிவு குறித்த செய்தி மற்றும் புகைப் படங்களை வலைத்தளம் ஊடாக இசையமைப்பாளர் டி.இமான் வெளியிட்ட சில மணிநேரத்தி லேயே வாழ்த்துக்கள் குவிய ஆரம்பித்தன. ஒருவகையில் இந் தச் செய்தியை கனடியத் தமிழர்கள் மாத்திரமல்லாது புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழர்களும் ஒரு கொண்டாட் டமாகவே எடுத்துக் கொண்டனர்.

இயக்குநர் லக்ஷ்மணின் இயக் கத்தில், நடிகர் மற்றும் நடன இயக்குநர் பிரபுதேவா தயாரிக்க ஜெயம் ரவி, ஹன்சிகா மற்றும் அரவிந்த சுவாமி இணைந்து நடிக் கும் போகன் என்ற திரைப்படத் துக்காக இந்தப் பாடல் சென் னையில் ஒலிப்பதிவாகியுள்ளது.

பிரபலமான பாடலாசிரியர் தாமரை இந்தப் பாடலை எழுதி யுள்ளார் என்பது சிறப்புச் செய்தி யாகும்.

பொன்.வேணு கிருஷ்ணா

''ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?'' 36

சீனத்தலைவரின் நண்பரேட்ரம்ப் நிர்வாகத்தில் அமெரிக்காவுக்கான புதிய சீனத்தூதுவர்!

அமெரிக்காவுக்கான சீனத்தூது வராகும் Terry Branstad இற்கும் சீனத் தலைவர் Xi Jinping க்கும் இடையிலான நட்பு இதுவரை ஆழமானதுதான். ஆனால், அது தனிப்பட்டது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக-பொருளாதார மற்றும் இராணுவ உபாயங்கள் என்று வரும் போது இந்த நட்பு நீர்த்துப்போய்விடும். ஏனெனில் வர்த்தக - பொருளாதார மற்றும் இராணுவ உபாயங்கள் அந்த அந்த நாடுகளின் மக்களின் நலன் சார்ந்ததும் சர்வதேச மூலோபாயங்களுடன் பின்னிப்பிணைந்ததும் ஆகும்.

www.washingtonpost.com இணையம், Terry Branstad பற்றி கூறுவதன் சுருக்கம் தமிழில்..

அமெரிக்க மாநிலமான Iowa இல் 22 வருடகாலம் (தொடர்ச்சியான தவணைக் காலங்களாக அல்ல) ஆளுநராக பணியாற்றுபவர். அவர் சீனாவின் நீண்டபலவருடகால நண்பன். இந்த நட்பு சர்வதேச அரசியலில் தனித்துவம் மிக்கது. 1985 இல் Terry Branstad ஆளுநராக தனது முதலாவது தவணைக்காலத்தில் இருந்தபோதும் பின்னர் 2012 இல் ஆளுநராக இருந்தபோதும் Xi Jinping அவர்கள் Iowa மாநிலத்தின் கிராமங்களுக்குப் பயணம் மேற் கொண்டிருந்தார். தனது நண்பர் ஆளுநராக இருந்த Iowa மாநிலத்தில் விளையும் சோளம் மற்றும் சோயா ஆகியவற்றின் மீது பலவருடங்களாக சீனாவுக்கு இருந்த காதலால் அவற்றை இறக்குமதி செய்து தனது மக்களுக்குக் கொடுப்பதில் Xi Jinping ஆர்வம் காட்டியமையும் இந்த விஜயங்களுக்கான காரணங்களில் ஒன்றாகும். Xi Jinping உம் தனது நண்பரை இரண்டு தடவைகள் சீனாவுக்கு அழைத்து வரவேற்பும் விருந்தும் கொடுத்துள்ளார்.

Terry Branstad இன் பேச்சாளர் பின்வருமாறு கூறினார். அவர்கள் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். இந்த நட்பு வெறுமனே கமராவுக்கு புன்னகைத்துக் காட்சி கொடுக்கும் நட்பு அல்ல. உண்மையாகவே அவர்கள் ஒருவரோடு ஒருவர் நல்லுறவு கொண்டவர்கள். Xi மிகவும் தனிப்பட்டரீதியில் தனக்கு நெருக்கமும் அன்பும் மிக்கவர் என ஆளுநர் நம்புகிறார். He's old friends with China's president: Their relationship goes back decades, and it's one of the most unique in international politics. On his long path to the presidency, China's Xi Jinping visited rural Iowa in 1985, when Branstad was in his first term as governor, and again in 2012, when Branstad was also governor. (One likely reason Xi chose Iowa to visit in the first place: A growing China has been gobbling up Iowa's corn and soybean production for the past decade.) The two got along so well, Xi even invited Branstad to China a couple times. Aides say the relationship is authentic. They like each other & it's not just smile for the cameras, pomp and circumstance, then&Branstad spokesman Tim Albrecht told the Des Moines Register. They get along really well, and the governor believes that President Xi is very personable.

குடியரசுக் கட்சியின் அயோவா மாநில ஆளுநர் டெர்ரி பிரான்ஸ்டாட், ஒரு நம்பகமான இடைத்தரகராகிறார்.

குடியரசுக் கட்சியின் அயோவா மாநில ஆளுநர் டெர்ரி பிரான்ஸ்டாட் (Terry Branstad), சீனாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமை ட்ரம்பின் எதிர்கால பதவி நியமன தேர்வுக்குழு உறுதிப்படுத்தியது. ட்ரம்ப் அவரது தேர்தல் பிரசாரம் நெடுகிலும் ஒரு ஆக்ரோஷமான சீன-விரோத நிலைப்பாட்டை ஏற்றிருந்தார். ஆனால் பிரான்ஸ்டாட் ஐ தேர்ந்தெடுத்ததன் மூலம், அவர் பெய்ஜிங் உடனான உயர்மட்ட உறவுகளுக்கு ஒரு நம்பகமான இடைத்தரகரை நியமித்துள்ளார்.

ஜி ஜின்பிங் அவர்கள் பிரான்ஸ்டாட் உடன் ஆளுநர் மாளிகையில் தங்கினார்

பிரான்ஸ்டாட் 1985 இல் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை முதன் முதலில் சந்தித்தார், அப்போது ஜி 31 வயது அதிகாரியாக சீனாவின் ஹெபி மாகாணத்திலிருந்து அமெரிக்காவுக்கு முதல் விஜயம் மேற்கொண்டிருந்தார். அமெரிக்க விவசாய முறைகளைத் தெரிந்துகொள்ள வந்திருந்த ஜி, சிறிய நகரமான மஸ்கட்டினில் ஒரு குடும்பத்தினருடன் தங்கினார். 2013 இல் அவர் ஜனாதிபதியாக பதவி யேற்பதற்கு முன்னர் சீன துணை-ஜனாதிபதியாக அவர் 2012 இல் மஸ்கட்டினுக்கு மீண்டும் விஜயம் செய்த போது, அவர் பிரான்ஸ்டாட் உடன் ஆளுநர் மாளிகையில் தங்கினார்.



''சீன மக்களின் ஒரு பழைய நண்பர்''

சீன வெளியுறவு கொள்கை விவகாரங்களுக்கான அமைச்சக செய்தி தொடர்பாளர் லு காங் குறிப்பிடுகையில், பிரான்ஸ்டாட் ஐ ''சீன மக்களின் ஒரு பழைய நண்பர்'' என்று வர்ணித்ததுடன், சீன-அமெரிக்க உறவுகளை ஊக்குவிப்பதில் ஒரு மிகப்பெரிய பாத்திரம் வகிக்க அவரை நாங்கள் வரவேற்போம், என்பதையும் சேர்த்துக் கொண்டார்.

பன்றி இறைச்சி, சோயா, சோளம் உட்பட அயோவாவின் வேளாண் உற்பத்திகள் சீனாவுக்கு

பன்றி இறைச்சி, சோயா, சோளம் உட்பட அயோவாவின் வேளாண் உற்பத்திகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய பிரான்ஸ்டாட் உத்வேகத்துடன் ஊக்குவித்துள்ளார். அவர் ஏழு முறை சீனாவுக்கு விஜயம் செய்துள்ளார், மிக சமீபத்தில் கடந்த மாதம் தான் ஒரு வணிக பணிக்காக அங்கே சென்று வந்திருந்தார்.

பிரான்ஸ்டாட்-ட்ரம்ப் உறவும் ''சீனாவைக் கையாள்வதற்கான நமது பிரதான நபர்'' எனும் ட்ரம்பின் சிலாகிப்பும்

பிரான்ஸ்டாட் அதேநேரத்தில் ட்ரம்ப் உடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவராவார். ட்ரம்பை ஆதரிப்பதில் ஒரு முக்கிய குடியரசுக் கட்சி பிரமுகரான அவர், தேர்தலின் போது அயோவாவில் அவருக்காக பிரசாரம் செய்தார். அந்த ஆளுநரின் மகன் எரிக், அயோவாவுக்கான ட்ரம்பின் பிரசார நிர்வாகியாக இருந்தார். நவம்பர் மாத ஆரம்பத்தில் அம்மாநில பிரசார பேரணி ஒன்றில், பிரான்ஸ்டாட் ஐ ''சீனாவைக் கையாள்வதற்கான நமது பிரதான நபர்'' என்று வர்ணித்து, அவரது நியமனம் மீது ட்ரம்ப் சமிக்ஞை செய்திருந்தார்.

தனிப்பட்டரீதியில் நெருக்கமாக அறிமுகமானவர்களை மற்றும் கூட்டாளிகளைத் தேர்ந்தெடுக்கும் ஒரு வடிவம் தொடர்கிறது

ட்ரம்பின் பிரான்ஸ்டாட் நியமனத்தில், அவரது நிர்வாக வேலைகளுக்கு தனிப்பட்டரீதியில் நெருக்கமாக அறிமுகமானவர்களை மற்றும் கூட்டாளிகளை தேர்ந்தெடுக்கும் ஒரு வடிவம் தொடர்கிறது. ட்ரம்பின் எதிர்கால பதவி நியமன தேர்வுக்குழுவின் செய்தி தொடர்பாளர் ஜேசன் மில்லர் உவகையோடு கூறுகையில், பிரான்ஸ்டாட் குறிப்பிடத்தக்களவில் அரசு கொள்கை அனுபவம்'' கொண்ட ஒருவராவார், வணிக பிரச்சினைகள், விவசாய பிரச்சினைகள் மீது ஒரு பலமான பிடியை வைத்திருக்கக்கூடியவர், அவருக்கு சீனா மற்றும் சீன் மக்கள் குறித்து நல்ல புரிதல் உண்டு,- என்றார்.

அயோவா அரசியல்வாதியான பிரான்ஸ்டாட், மிகக் குறைந்த வெளியுறவுகொள்கை அனுபவமே கொண்டவர்

யதார்த்தத்தில் ஒரு நீண்டகால அயோவா அரசியல்வாதியான பிரான்ஸ்டாட், மிகக் குறைந்த வெளியுறவு கொள்கை அனுபவமே கொண்டவர், மேலும் சீனாவைக் குறித்த அவரின் அறிவு, அவர் மாநிலத்துக்கு சிறந்த வணிக உடன்படிக்கைகளுக்காக அழுத்தமளிப்பதற்கு உயர்மட்ட சீன தலைவர்களுடன் அவர் அறிமுகமானவர் என்பதை ஊக்குவிப்பதற்கான அவரது முயற்சியிலிருந்து வருகிறது. வணிகங்களைப் பொறுத்த வரையில், அவர் பசிபிக் இடையிலான கூட்டு உடன்படிக்கைக்கு (TPP) வார்த்தையளவில் ஆதரவானவர், இந்த உடன்படிக்கையைத் தான் ட்ரம்ப் அவர் பதவியேற்பு முதல் நாளிலேயே தகர்ப்பதாக சூளுரைத்துள்ளார்.

மூலோபாயத்தைத் தீர்மானிப்பதில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்காமல் போகலாம்

பசுபிக் இடையிலான கூட்டு உடன்படிக்கையில் பிரான்ஸ்டாட் ட்ரம்புடன் வேறுபட்டிருப்பதும், அத்துடன் வட கொரியா பிரச்சினை, தென் சீனக் கடலில் அதிகரித்துவரும் பதற்றங்கள் மற்றும் சீனாவுக்கு எதிராக ஆசியா முழுவதிலுமான அமெரிக்காவின் இராணுவ கட்டமைப்பு போன்ற முக்கிய பிரச்சினைகளில் அவரின் பரிச்சயமற்ற தன்மையும், அவர் பெய்ஜிங் நோக்கிய கொள்கை அல்லது மூலோபாயத்தை தீர்மானிப்பதில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்காமல் போகலாம் என்பதையே அறிவுறுத்துகிறது.

அந்த முடிவு ஏற்கனவே பெய்ஜிங்கில் எட்டப்பட்டு வருகிறது. பெய்ஜிங் பல்கலைக்கழகத்தின் ஒரு துணை பேராசிரியர் Jie Dalei வாஷிங்டன் போஸ்டுக்குக் கூறுகையில், பிரான்ஸ்டாட்டின் நியமனம் தொடர்புகளுக்கு வேண்டுமானால் உதவக்கூடும், ஆனால் முடிவெடுக்கும் மட்டத்தில் பெரும் தாக்கத்தை அனேகமாக கொண்டிருக்காது,- என்றார்.

ட்ரம்பின் முடிவின் மீது சீன அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது

1979 இற்குப் பின்னர் உயர்மட்ட அமெரிக்க மற்றும் தாய்வானிய தலைவர்களுக்கு இடையிலான முதல் தொலைபேசி உரையாடலாக தாய்வானின் ஜனாதிபதி சாய் இங்-வென்னிடம் இருந்து வந்த ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்பதென்ற ட்ரம்பின் முடிவின் மீது சீன அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இந்த உரையாடல், தாய்வான் உட்பட சீனா முழுமைக்கும் ஒரே சட்டபூர்வ அரசாங்கமாக பெய்ஜிங்கை மட்டுமே அங்கீகரித்திருந்த அமெரிக்காவின் ''ஒரே சீனா'' கொள்கையுடன் ஒட்டிக் கொண்டிருந்த அதன் நிலைப்பாட்டை கேள்விக்குட்படுத்தி உள்ளது.

(கேள்வி தொடரும்...)

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்க ளுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயிர்ப வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய எழுச்சி

அத்தியாயம் - 01

இனப் பிரச்சினையின் வரலாற்றுப் பின்னணி

இலங்கைத் தீவு, தொன்மை வாய்ந்த இரு நாகரிகங்களின் வரலாற் றுத் தாயகமாகும். வேறுபட்ட மொழி கள், பாரம்பரியங்கள், பண்பா டு கள், வேறுபட்ட நிலப்பரப்புக்கள், வெவ் வேறான வரலாறு களைக் கொண்ட இரு தனித்துவமான தேசிய இனங்களாக அது விளங்குகின்றது. இத்தீவில் வதியும் தமிழ் மக்களது வரலாறு பண்டைய யுகம் வரை வேரோடிச் செல்கிறது. சிங்கள மக்க ளின் மூதாதையர், கி.மு.ஆறாம் நூற்றாண்டில் வங்காளத்தில் இருந்து தமது இளவரசன் விஜயனுடன் இந்தத் தீவை வந்தடைந்தபோது தொன்மை வாய்ந்த திராவிட (தமிழ்) குடியிருப் புக்கள் இங்கிருக்கக் கண்டார்கள். இலங் கைத் தீவில் சிங்களக் குடியேற்றம் நிகழ்வதற்கு முந்திய காலத்தில், நாகர், இயக்கர் என்ற திராவிட தமிழ் இராச் சியங்கள் நிலைபெற்றிருந்தன எனச் சிங்கள வரலாற்றுப் பதிவேடுகளான தீபவம்சமும், மகாவம்சமும் எடுத் தியம்புகின்றன. இந்த வரலாற்றுப் பதிவேடுகளை எழுதிய பௌத்த பிக்குகள் இலங்கையின் பூர்வீகக் குடிகளது வரலாற்றைத் திரித்துக் கூற முற்பட்டனர். புராதனத் தமிழர் களை மானிடர் அல்லாதோர் என்றும் அமானுசிய சக்தி வாய்ந்த அரக்கர்கள் என்றும் வர்ணித்திருக்கிறார்கள். இலங் கைத் தீவின் பூர்வீகக் குடிகளது உண்மை வரலாறு புராணங்கள், கட்டுக் கதைகளால் மூடி மறைக்கப் பட்டபோதும், காலத்தால் முந்திய ஆதிவாசிகள் தமிழர்களே என்று தற் கால ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். புவி அமைப்பின்படி, இத்தீவுதென் னிந்தியாவை அண்டியதாக அமை யப்பெற்றிருப்பதை நோக்குமிடத்து, வட இந்தியப் பிரதேசமான வங்காளத் தில் இருந்து விஜயனும் அவனது தோழர்களும் கடல்மார்க்கமாக வந்து இங்கு தரை இறங்கு முன்னர் இத்தீ வின் பூர்வீகக் குடிகளாக திராவிடத் தமிழர்களே இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இருந்து இத்தீவில் நிகழ்ந்த கொந்தளிப்பான அரசியல் வரலாற்றைப் பௌத்த வர லாற்றுப் பதிவேடுகள் பொறித்திருக் கின்றன. தமிழ், சிங்கள மன்னர் களிடையே நிகழ்ந்த கொடும் போர் கள் பற்றியும், தென்னிந்திய தமிழ் சாம்ராஜ்யங்களின் படையெடுப்புக்கள் பற்றியும், மேலாண்மையை நிறுவுவ தற்காகத் தமிழ் சிங்கள இராச்சியங்கள் மத்தியில் வெடித்த கோரமான யுத்தங் கள் பற்றியும் இவ் வரலாற்று ஏடுகள் விவரிக்கின்றன. வரலாற்று ரீதியாக, இலங்கைத்தீவு வெவ்வேறு கால கட்டங்களில் சிங்கள மன்னர்களாலும் தமிழ மன்னர்களாலும் ஆட்சி செய்யப் பட்டது. இடையிடையே, காலத்துக்குக் காலம் நிகழ்ந்த போர்கள் காரணமாக தமது தலைநகர்களைத் தெற்கு நோக்கி நகர்த்த சிங்கள அரசர்கள் நிர்ப்பந்திக் கப்பட்டார்கள். 13 ஆம் நூற்றாண்டில் இருந்து, இலங்கையில் அந்நியக் குடியேற்ற ஆதிக்கம் தலையிடுவ தற்கு இடைப்பட்ட காலத்தில், தமிழ் மக்கள் தமது சொந்த இராச்சியத்தில், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அடங்கியதான தமது சொந்த பாரம் பரிய நிலத்தில், ஒரு நிலைபெற்ற தேசிய இனக்கட்டமைப்பாகத் தமது சொந்த அரசர்களால் ஆளப்பட்டு வந் தனர்.

பிரபல கடல் யாத்திரிகனான மார்க்கோ போலோ இலங்கைத் தீவை இப்பூமியின் சுவர்க்கம் என வர்ணித் திருக்கிறார். 'இந்து மா கடலின் முத்து' எ னப் புகழ்ந்துரைத்தனர் ஆங் கிலக் குடியேற்ற ஆட்சியாளர். இந் தியாவின் தென்கரையில் இருந்து இருபத்தொரு மைல் நீர் இடைவெளி யில் பிரிக்கப்பட்டிருக்கும் இலங் கைத்தீவு 25 ஆயிரத்து 332 சதுர மைல் பரப்புடையது. அந்நிய குடி யேற்றம் ஊடுருவுவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகத் தன்னிறைவு கொண்ட பொருளாதார வளம்பெற் றதாக இத்தீவு விளங்கியது. அத்தோடு, கீழைத்தேய களஞ்சியமாகவும் புகழீட் டியிருந்தது. அந்நியக் குடியேற்ற ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் இத் தீவின் பொருளாதார உற்பத்தி வடிவம் நிலமானிய சமூக அமைப்பைக் கொண்டதாக அமையப் பெற்றிருந் தது. தமிழர் தேசத்தின் பொருளாதார வடிவம் நிலமானிய சமூகத் தன்மை யைக் கொண்டிருந்தபோதும், தனக்கே உரித்தான தனிப் பண்புகளை உடைய உற்பத்தி உறவுகளில் கட்டப்பட்டி ருந்தது. பல்வேறு சமூகப் பணிகளின் அடிப்படையில், பல படி நிலைகளாக வகுக்கப்பட்ட சாதியக் கட்டமைப்பை அடித்தளமாகக் கொண்டு இப்பொரு ளாதார உற்பத்தி வடிவம் இயங்கியது. பெரும் குளங்களையும் கால்வாய்க ளையும் பரவலாகக் கொண்டமைந்த நீர்ப்பாசன விவசாய முறைமைக்கா கவே மத்திய கால இலங்கை புகழ் பெற்று விளங்கியது. ஆயினும், காலப்போக்கில், வடக்கிலும் வட மத்திய மாநிலத்திலும் அமையப் பெற்றிருந்த இந்த நீர்ப்பாசன உற்பத்தி வடிவம் பராமரிப்பற்று, பழுதடைந்து, படிப்படியாகச் சீரழிந்து அடர்ந்த காட் டினுள் அமுங்கியது. இக்கால கட்டத் தில், சிங்கள நிலமானிய பிரபுக்கள் மத்திய மலைப் பிரதேசங்களை நோக்கி நகர்ந்து, கண்டியைத் தலைநகராக வரித்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயர் 16 ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலே இந்தத் தீவில் முதல் காலடி வைத்தபோது, இரண்டு புராதன அரசுகள் இங்கு அரசோச்சக் கண்டார்கள். வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் தமிழ் மக்களும் தெற்கே சிங்கள மக்களும் வாழ்ந்து கொண்டி ருப்பதைக் கண்டனர். வெவ்வேறான பண்பாடுகளோடு, முற்றிலும் வேறு பட்ட சமூகங்களாக அவர்கள் இயங் குவதையும், தனித்தனி இனங்களாகத் தத்தமக்கென்ற தனியான அரசாட்சி அமைப்போடு பிரிந்து வாழ்வதையும் அவர்கள் கண்ணுற்றனர். முதலில் ஒப்பந்தங்களிலும் பின்னர் போர் களிலும் ஈடுபட்ட போர்த்துக்கேயர், 1619 இல் இறுதிப் போர் நடத்தி, தமிழ் இராச்சியத்தைத் தோற்கடித்து, தமிழ் மன்னன் சங்கிலிய குமாரனைத் தூக்கிலிட்டார்கள். ஆயினும், போர்த் துக்கேயரும் சரி அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் சரி, தமிழர் தேசத் தைத் தனி இராச்சியமாக ஆண்டு,தமி ழர் தாயகத்தினது பிரதேச ஒருமைப் பாட்டையும், தமிழ் மக்களின் இன அடையாளத்தையும் அங்கீகரித்தார்கள். 1799 இல் ஆங்கிலக் குடியேற்ற சாம் ராச் சி யம், தீவின் ஆட் சிக் கட்டுப்பாட்டை ஒல்லாந்தரிடமிருந்து பற்றிக்கொண்டது. இரண்டு இனங் களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாத பிரித்தானியர்,1833 இல் இரண்டு தேசங்களையும் ஒன் றாக்கி ஒற்றையாட்சி அமைப்பைத் திணித்தனர். இவ்வாறு அந்நிய குடி யேற்றவாதம், இன்றைய தேசிய போராட்டத்துக்கு அடித்தளமிட்டது. நிர்வாக நோக்கங்களுக்காக ஒற்றை யாட்சி அரசைப் பிரித்தானியர் உரு வாக்கியபோதும், இத்தீவு, வேறுபட்ட இரு இனங்களின் தாயகமாக விளங் கியது என்பதை அவர்கள் அங்கீகரித் தார்கள். குடியேற்ற ஆட்சியின் முதல் செயலதிபராக 1799 இல் பதவியேற்ற சேர் கிளக்கோண் அவர்கள், தமது ''கிளக்கோண் அறிக்கை'' என்று மிக பிரசித்தி பெற்ற குறிப்பேட்டில் பின்வ ருமாறு கூறுகிறார்: *''இரு வேறுபட்ட தேசிய இனங்கள், மிகப் புராதன-காலத்தில் இருந்தே தீவின் வளங்க ளைத் தம்மிடையே பிரித்து வைத் திருக்கிறார்கள்: வளவை நதியில் இருந்து சிலாபம் நதிவரை, அதன் தெற்கிலும், மேற்கிலும் உள்ள உள் நாட்டுப் பகுதிகளைச் சிங்களவர் கொண்டிருக்க, மலபார்கள் (தமிழர்) வடக்குக் கிழக்கு மாவட்டங்களைத் தமதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரு தேசிய இனங்களும் தங்கள் சமயம், மொழி, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் முற்றாக வேறுபட்ட வர்களாகக் காணப்படுகின்றனர்.''*

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொடர்ந்து செல்லும் தொன்மைமிக்க ஆழமான வரலாற்று வேரோடல்களைக் கொண்டுள்ளனர். தனித்தனி தேசிய இனங்களாகக் கணிக்கப்படும் தன் மைகளையும் இவர்கள் கொண்டுள்ள னர். எனினும், வரலாற்று ஓட்டத்திலே இலங்கைத்தீவு, வேறு பல்லினப் பண்பாட்டு வடிவங்களையும் உரு வாக்கிக் கொண்டது. இத்தீவில் வேறு இனக் குழுக்களும் வாழ்கின்றன. அவற்றுள் முஸ்லிம்களும் மலையகத் தமிழரும் தமக்கெனத் தனித்தனியான பண்பாட்டு வாழ்வுடையவர்களாக விளங்குகின்றனர்.

இலங்கையின் முஸ்லிம்களின் மூலத்தை, 10 ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் இருந்து வர்த்தகர்களாக இத்தீவுக்கு வந்தவர்களுடன் பொருத் திப் பார்க்கலாம். தமிழைத் தம் தாய் மொழியாக வரித்துக் கொண்ட இந்த முஸ்லிம்கள், தீவின் கிழக்கேயும் தெற்கேயும் பெருமளவாகக் குடியமர்ந் தார்கள். தமிழைத் தாய்மொழியாகத் தழுவி, கிழக்கிலே தமிழ் மக்களோடு கூடிக் குடியமர்ந்து, விவசாயிகளாக வாழ்கின்ற இவர்கள், தாம் ஒரு தனித் துவமான இனக்குழுவினர் என்ற கூட்டுப் பண்பாட்டு உணர்வைத் தமது மதமான இஸ்லாமிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள்.

(தொடரும்...)

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொடர்ந்து செல்லும் தொன்மைமிக்க ஆழமான வரலாற்று வேரோடல்களைக் கொண்டுள்ளனர். தனித்தனி தேசிய இனங்களாகக் கணிக்கப்படும் தன்மைகளையும் இவர்கள் கொண்டுள்ளனர். எனினும், வரலாற்று ஓட்டத்திலே இலங்கைத் தீவு, வேறு பல்லினப் பண்பாட்டு வடிவங்களையும் உருவாக்கிக் கொண்டது. இத்தீவில் வேறு இனக் குழுக்களும் வாழ்கின்றன. அவற்றுள் முஸ்லிம்களும் மலையகத் தமிழ ரும் தமக்கெனத் தனித்தனியான பண்பாட்டு வாழ்வுடையவர்களாக விளங்குகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

இலங்கைக்குக் கடத்தவிருந்த மருந்துகள் கைப்பற்றப்பட்டன

இராமநாதபுரம், டிசெ.20

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்த இருந்த ஒரு தொகை மருந்துப் பொருள்கள் இராமநாதபுரம் பகுதியில் பொலிஸாரல் கைப்பற்றப்பட்டன. அத்துடன் அந்த மருந்துப் பொருள்களைக் கடத்த இருந்தார் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாதாரண மருந்துகள் மற்றும் வலி நிவாரண மருந்துகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. சட்டவிரோதமாக மருந்துகள் கடத்தப்படுகின்றன என்று சென்னை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அந்த மருந்துப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர், மருந்துகளைச் சட்டவிரோதமாக விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

அரிசி விலையைக் கட்டுப்படுத்த நெல் விநியோக சபை நடவடிக்கை

கொழும்பு, டிசெ.20

அதிகரித்துள்ள அரிசி விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக நெல் விநியோக சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லைச் சீரான கட்டமைப்பின் கீழ் அரிசி ஆலையாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் களஞ்சியத்திலுள்ள 2 லட்சத்து 90 ஆயிரம் மெட்றிக் தொன் நெல்லின் ஒரு தொகையை அரிசி ஆலையாளர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நெல் விநியோக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கான பேச்சுகள் நிறைவடைந்துள்ளன என்று தெரிவித்துள்ள அந்த சபை, அரிசி விலையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையை மேற்கொள்ளக் காலம் தாழ்த்தாது செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (எ)

தினசரி ராசி பலன் 20.12.2016

சுபநேரம் : காலை : 7.45 – 8.45
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 3.00 – 4.30
குளிகன் : 12.00 – 1.30
எமகண்டம் : 9.00 – 10.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

மேஷம்: ஆரோக்கியம் - இன்று உங்கள் உடல் நலம் மிகச்சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

ரிஷபம்: நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் ஏற்படும்.

மிதுனம்: உற்சாகம் - அனைத்துக் காரியங்களிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

கடகம்: லாபம் அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

சிம்மம்: பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

கன்னி: பாசம் - அனைவரிடத்திலும் ஈகை கொண்டும் அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

துலாம்: பேராசை - அளவான ஆசைகளுடன் அனைவரையும் அரவணைத்தால் நலம் ஏற்படும்.

விருச்சிகம்: பணிவு - உறவினர்களிடமும் நண்பர்களிடமும் பணிவுடன் செயற்பட்டு செயல்களை நிறைவேற்றுவீர்கள்.

தனுசு: அனுகூலம் - அதிஷ்டம் அழைய விருந்தாளிகளாக வீட்டு வாசல் கதவுகளைத் தட்டும் யோகம் தரும் நாள்.

மகரம்: சினம் - வீண்கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

கும்பம்: நலம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தினால் நலம் ஏற்படும்.
சந்திராஷ்டமம் : அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம்.

மீனம்: ஆக்கம் - இன்று உங்களுடைய செயலில் நல்முன்னேற்றம் தோன்றும்.

இந்திய மீனவரின் அத்துமீறல் கடந்த ஆண்டைவிட குறைவு

மீன்பிடி அமைச்சு கூறுகிறது

கொழும்பு, டிசெ.20

இந்திய மீனவர்களின் சர்வதேச எல்லை தாண்டிய மீன் பிடி நடவடிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 50 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதால் அவர்களின் அத்துமீறல் குறைவடைந் துள்ளன என்று அந்த அமைச்சுக் கூறியுள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைச்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"2015 ஆம் ஆண்டு வரை கடந்த 30 ஆண்டுகளாக சுமார் வாரத்தில் 3 நாள்களாவது இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனால் இந்த நாட்டுக்கு சொந்தமான 600 மெட்ரிக் தொன் மீன்கள் இந்திய மீன வர்களால் பிடிக்கப்பட்டுள்ளன. அது இலங்கையின் மீன் பிடித் துறைக்கு பெரிய அச்சுறுத்தல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கையின் பின்னர் படகுகளைத் தவிர்த்து மீனவர்கள் மாத்திரம் விடுவிக்கப்படுவதால் நாட்டின் எல்லையை மீறும் நடவடிக்கைகள் குறை வடைந்துள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் சுமார் 114 வரை இலங்கையின் பொறுப்பில் இருக்கின்றன என்றும் ஒரு போதும் அவற்றை விடுவிக்கப்போவதில்லை என்றும் அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை இலங்கை மற்றும் இந்தியாவுக் இடையிலான மீன்பிடி பிரச்சினை தொடர்பான பேச்சு எதிர்வரும் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் 3,850 பேரை நியமிக்க நடவடிக்கை

கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

நாடளாவிய ரீதியில், 3 ஆயிரத்து 850 விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் கூறியவை வருமாறு:-

"உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில், மாணவர்களிடையே விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக, நாடளாவிய ரீதியில், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் 3 ஆயிரத்து 850 பேரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான வர்த்தமானி அறிவித்தல், எதிர்வரும் ஜனவரி மாதமளவில் வெளியிடப்படும். அதன் பின்னர், இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். இதற்கு விண்ணப்பிப்போர், 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஏதேனும் ஒரு விளையாட்டுப்போட்டியில், மாகாண, தேசிய, சர்வதேச சான்றிதழ்களைப் பெற்றிருப்பதும் அவசியம். இத்தகைமைகளைக் கொண்டிருப்போர், பயிற்றுவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பதுளையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரி, விளையாட்டுக் கல்லூரியாக மாற்றப்படவுள்ளது. மேற்படி பதவிகளுக்காகத் தெரிவு செய்யப்படும் 3 ஆயிரத்து 850 பேருக்கும், இந்தக் கல்வியியற் கல்லூரியிலேயே பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சிகள் வழங்கப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு பாடசாலைக்கும் இருவர் என்ற ரீதியில் நியமிக்கப்படுவர். இவர்கள் காலை, மாலை என இரு வேளைகளில், கடமையில் அமர்த்தப்படுவர். அவர்களுக்கு, ரூ.30 ஆயிரம் வரை கொடுப்பனவுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை எதிர்வரும் ஆண்டு, தமிழ்ப் பாடசாலைகளில் யோகா பயிற்சியையும் பாடத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள், கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன."-என்றார். (எ)

ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் வழங்கிய இலங்கையர் நாடு கடத்தப்படும் அபாயம்

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் நிறுவுநர் எட்வட் ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் வழங்கிய இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் நாடு கடத்தப் படக்கூடிய அபாயத்தை எதிர் நோக்கியுள்ளார் என்று சீன ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட தகவல் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

ஸ்னோவ்டனுக்கு இலங்கையரான சுபுன் திலின கெலபாத்த மற்றும் அவரது மனைவி நதீகா தில்ருக்ஸி நோனீஸ் ஆகியோர் ஹொங் கொங்கில் அடைக்கலம் வழங்கியிருந்தனர். அந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் உரிய நேரத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். இதனால் சிறையில் தடுத்து வைத்து நாடு கடத்தப்படக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கி வருகின்றார்.

சட்டத்தரணி உரியநேரத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை அந்தச் சட்டத்தரணி ஸ்னோவ்டனுக்கு உதவிகளை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

பெரும்போக நெற்செய்கைக்கு உரமானியம் விவசாயிகளுக்கு வழங்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, டிசெ.20

பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கம்பஹா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்புச் செய்யும் பணிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளன என விவசாய அமைச்சின் மேலதிக செயலாளரும் உரச் செயலகத்தின் பதில் பணிப்பாளருமான விஜித்த சந்திர பியத்திலக்க தெரிவித்தார்.

ஏனைய மாவட்ட விவசாயிகளுக்கு இந்த வாரம் பணம் வைப்புச் செய்யப்படும் என்றும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் அனைத்து விவசாயிகளுக்குமான பணம் வைப்புச் செய்யப்படும் என்று மேலதிக செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"உரமானியம் வழங்குவதற்காக விவசாயிகளின் விவரங்களைச் சேகரிப்பதற்காக 11 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் அடங்குவர்.

பெரும்போகத்துக்குப் போதுமான இரசாயன உரம் நாட்டில் காணப்படுகிறது. எனினும் விவசாயிகள் சேதனப் பசளை பாவனைக்குப் பழகியிருப்பதால் இரசாயனப் பசளை பாவனை குறைவடைந்துள்ளது.

பார உலோகங்கள் கூடுதலாகக் காணப்படும் இரசாயனப் பசளையை வருடத்துக்கு ஒரு தடவை பயன்படுத்தினால் போதுமானது."-என்றார். (எ)

ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த கல்வி பாடசாலை மட்டத்தில் குறைகிறது

எமது பாடசாலைக் கல்வி நடைமுறையில் ஒழுக்க விழுமியம் சார்ந்த கல்வி குறைவடைந்து செல்கின்றது.

காலைப் பிரார்த்தனைகளின் போது இவ்வாறான ஒழுக்க விழுமியக் கருத்துக்களை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

சுகாதாரம் சம்பந்தமான செயற்பாடுகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆன்மீகம் யோகா சம்பந்தமான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் உருவாக்கம் மகிழ்ச்சியானது. இன்றைய காலத்துக்குத் தேவையானது. மூத்த கல்வியியலாளர் களின் ஆலோசனையைப் பெற்று நடை முறைப்படுத்தத் தயாராகவுள்ளோம்.

மாணவ சமுதாயத்தை நல்ல சமுதாயமாக மாற்ற வேண்டிய பங்கு நிறையவுள்ளது. தூர நோக்கைச் சரியாக நிர்ணயித்தால் எந்தத் தடையும் வராது. வட மாகாணத்துக்குரியது சிரேஷ்டபள்ளியியலாளர் ஒன்றியம். வடமாகாணத்தில் இருந்து ஏனைய அமைப்பில் உள்ளவர்களையும் இதில் உள்வாங்கிச் செயற்படுத்த வேண்டும்.

நாம் 21 ஆம் நூற்றாண்டில் இருக்கின்றோம். 21 ஆம்நூற்றாண்டு புத்தாக்க சிந்தனைக்கு பாடசாலை களுக்கு ஊடாக வழங்கும் கல்வியை விட சிந்தனைத் தூண்டலுக்கு எவ்வாறு செயற்பாடுகளை மேற் கொள்ளப்போகின்றோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

20 இல் புத்தகம் கருவியாக இருந்தது. 21 இல் தொழில் நுட்பம் கருவியாகிறது. தொழில் நுட்பத்தை வழங்கத்தக்க வகையில் கல்வியில் மாற்றம் தேவை. அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் பூஜ்ஜிய உலகுக்குள் எமது சந்ததியினர் சென்று விடுவார்கள் .

21ஆம் நூற்றாண்டில் திறன்கள், விவரண சிந்தனைப் பிணக்குகளைத் தீர்க்கும் திறன்களை உடையனவாக இருக்க வேண்டும். ஒத்துழைப்பு, தன்னுணர்வு, முயற்சி யாண்மை உடையவராக இருக்க வேண்டும். வினைத்திறன் மிக்க ஆற்றல், கண்டறிதல், கற்பனை வளம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இவற்றை மாணவர்களிடத்தில் ஊக்குவிக்கும் பண்பு அதிபர்கள், ஆசிரியர்களிடத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொறுப்பை உணரும் போது சரியான கல்வியைக் கொடுக்கலாம். பிள்ளைகள் திறன் வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைத் தடுப்பவர்களாக நாம் இருத்தல் கூடாது. அவர்கள் வழியில் கல்வியைக் கொடுப்ப வர்களாக இருக்க வேண்டும். 20 ஆம் நூற்றாண்டில் ஆசி ரியர்கள் கற்பித்தார்கள். 21 ஆம் நூற்றாண்டில் வழிகாட் டுபவராக - பயிற்றுவிப்பாளர்களாக ஆசசிரியர்கள் இருக்க வேண்டும். இதற்கு ஏற்ப கல்வி நடைமுறை மாற வேண் டும். தொடர்ச்சியான கற்பித்தல் செயற்பாடு இதற்கு ஏற்ப கல்வியைக் கொடுப்பவராக மாற வேண்டும். இந்த விடயங்களை எங்கள் பிள்ளைகளிடத்தில் கொண்டு செல்ல ஒத்துழைக்க வேண்டும்.

கல்வி அமைச்சின் செயற்பாட்டுக்கு அமைய கல்வி மீளாய்வு என்னும் செயற்பாட்டை வெளியிட்டுள்ளோம். அதில் பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. பல சிபாரி சுகளை நடைமுறை செய்ய உள்ளோம். வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. அடுத்த வருடத்தை வாசிப்பு ஆண்டாக மாற்றி, வாசிப்பின் ஊடாக பூரண மொழியறிவுள்ளவராக மாணவர்களை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண் டும். இதற்கு அமைப்புக்கள் உதவ வேண்டும்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், ஆறுதல் போன்று பல அமைப்புகள் இந்த விடயம் தொடர்பில் முழு வீச்சுடன் பணியாற்ற வேண்டும்.

எமது பாடசாலைக் கல்வியில் ஒழுக்க விழுமியம் சார்ந்த கல்வி குறைவடைந்து செல்கின்றது. காலைப் பிரார்த் தனைகளின் போது இவ்வாறான ஒழுக்க விழுமியக் கருத் துக்களை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும். சுகாதாரம் சம்பந்தமான செயற்பாடுகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆன்மீகம், யோகா சம்பந்தமான பயிற்சிகளை வழங்க வேண்டும். இவ்வாறான விடயங்களில் எல்லோரும் ஒருமித்துச் செயற்படுவதன் ஊடாகப் பலமான எதிர்கால சந்ததியைக் கட்டியெழுப்ப முடியும். (இ-54)

மூத்தோர் அனுபவ ஞானம் எம்மை சமூகத்தில் உயர்த்தும்

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மூத்தோர் அனுபவத்தை மதிப்பதும் ஒன்றாக உள்ளது. கல்வியியலாளர்கள், மூத்தவர்களுடைய அனுபவங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண் டும்.

இவ்வாறான செயற்பாடுகள் காலத்தின் தேவையாகவுள்ளன. இதனூடாகவே ஆரோக்கிய

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் அலுவலகத் திறப்பு விழா யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்பாக ஒன்றிய தலைவரும் ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகி யோர் ஆற்றிய உரைகளின் தொகுப்பு தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு.

முள்ள சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மூத்தோர் அனுபவத்தை மதிப்பது நீண்ட காலம் உண்டு. அனுபவஞானம் எம்மை உயர்ந்தவராக ஆற்றுப்படுத்துகின்றது.

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வி யியலாளர்கள் ஒன்றியத்தை ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர்கள், அதிபர் கள் கல்வியியலாளர்கள் ஒன்றிணைந்து உரு வாக்கியுள்ளனர்.

வயது மூத்த கல்வியியலாளர் சிந்தனை அபாரமானது. பெரிய கல்வியியலாளர்கள் வாழ்ந்த மண்ணில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

ஆஸ்ரேலியாவில் மூத்த பிரஜைகள் ஒன்றியம் உண்டு. வாரத்தில் 3 நாள்கள் அவர்கள் ஒன்று கூடுவார்கள். ஆஸ்தி ரேலிய அரசு மண்டப வாடை, போக்கு வரத்து வசதிகளைச் செய்து கொடுத் துள்ளது. இவ்வாறான அமைப்புக்கள் இருப்பதன் ஊடாக அவர்கள் தொடர்ந்து இயங் குகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான அமைப்புகள் உருவாக வேண்டும். அறிவுசார் அனுபவத்தை நாம் பெற் றுக்கொள்ள வேண்டும். (ஐ-54)

புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப் பாக எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் 'போதை எமக்கு பகை' என்றும் தொனிப்பொருளில் போதைப் பொருள் விழிப்புணர்வு தெரு வெளி ஆற்றுகை வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்கள அனுசர னையில் வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பிரிவின் ஒழுங்குபடுத்தலில் பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் ஆற்றுகை செய் யப்பட்டு வருகின்றது.

இந்த ஆற்றுகை நிகழ்வின் ஒரு காட்சியையும் ஆற்றுகைக்குழுவினரையும் படங்களில் காணலாம். (ஐ-54)

கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.20

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும், முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பீடத்தால் நடத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியில் நிலை ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது இலங்கைதிறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியில் இரண்டு கணிப்பு விகிதத்தை அல்லது விலக் களிப்பைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும் இந்தக் கற்கை நெறியின் காலம் ஒரு வருடமாகும்.

முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் க.பொ.த. உயர்தரப் பரீட்சை யில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது தொழில் உரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக பீடத்தால் நடத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும் இக் கற்கை நெறியின் காலம் நான்கு வருடங்கள் ஆகும்.

மேலதிக தகவல்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். (ஐ-54)

காலைக்கதிர் Kalaikkathir

மீன் இனங்கள் அழியும் அபாயம்

மும்பை, டிசெ.20

இந்தியாவின் கிழக்குக் கடல் பகுதியில் பெரும்பாலான மீன் இனங்கள் அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என மத்திய கடல் மீன்வளத்துறை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆய்வின்படி, இந்தியாவில் உள்ள 68 மீன் வகைகளில் சுமார் 47 வகைகள் அழியும் நிலையில் உள்ளன. குறிப்பாக ஒடிசா மற்றும் மேற்கு வங்கக் கடற்பகுதிகளில் மீன்கள் மிகுந்த அபாயக் கட்டத்தில் உள்ளன.

தட்பவெப்பநிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது, குறைவான மீன் உற்பத்தி உள்ளிட்டவைகள் இதற்கு முக்கிய காரணம். தட்ப வெப்ப நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் பல அரிய வகை மீன்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

வறிய, நடுத்தர மக்களுக்கு 'பட்ஜெட்'டில் சலுகைகள்

பிரதமர் மோடி அதிரடித் திட்டம்

டில்லி, டிசெ.20

ரூபா தாள்கள் பிரச்சினையைச் சமாளிக்க பட்ஜெட்டில் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள், தொழில் செய்பவர்களுக்கு சலுகைகள் வழங்கப் பிரதமர் நரேந்திர மோடி அதிரடித் திட்டம் தீட்டியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய அரசு கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக கடந்த மாதம் ரூ.500, ஆயிரம் ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று அறிவித்தது.

இதையடுத்து ரூ.13 லட்சம் கோடி பழைய ரூபா தாள்களை மத்திய அரசு திரும்பப் பெற்று, புதிய ரூபா தாள்களை வழங்கியுள்ளது.

ரூபாதாள்கள் விவகாரம் ஏழைகள், நடுத்தர மக்கள், தொழில் செய்பவர்கள் ஆகிய மூன்று பிரிவினரையும் மிகக் கடுமையாகப் பாதித்துள்ளன. அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூடப் பணம் கிடைக்காமல் பொதுமக்கள் திணறியபடி உள்ளனர். குறிப்பாக வங்கிகளிலும், ஏ.ரி.எம்.களிலும் பணம் கிடைக்காததால் மக்களிடம் அதிருப்தி காணப்படுகிறது.

50 நாள்களுக்குப் பின்னர் அதாவது எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப்பின்னர் நிலைமை சீராகிவிடும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால் ஏ.ரி.எம்.கள் முடங்கியுள்ளன. இதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மேலும் சில வாரங்களுக்கு நீடிக்கும் என்று கூறப்படுகிறது. இது மத்திய அரசு மீதான அதிருப்தியை மக்களிடம் அதிகரிக்கச் செய்துள்ளது.

ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்போது அதை எதிர்கொள்ள முறையான முன் எச்சரிக்கை ஏற்பாடுகள் எவையும் ஒழுங்காக முன்னெடுக்கப்படவில்லை என்ற குமுறல் மக்களிடம் உள்ளது.

மக்களிடம் நிலவும் இந்த அதிருப்தியைப் போக்க பிரதமர் மோடி ஆலோசனை நடத்தி வந்தார். அதன் அடிப்படையில் புதிய அதிரடித் திட்டம் ஒன்றை அவர் தீட்டியுள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடர் முடிவடைந்தபோது பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசிய பிரதமர் நரேந்திரமோடி தனது புதிய அதிரடித் திட்டம் பற்றி சூசகமாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சில தகவல்களை வெளியிட்டார்.

பிரதமர் மோடி பேசிய போது, ''ஏழைகளுக்கான நலத்திட்டங்கள், நடுத்தர வகுப்பு மக்கள் சுரண்டப்படுவதில் இருந்து காப்பது, தொழில் செய்பவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்களைக் குறைத்தல் ஆகிய மூன்றுக்கும் முன்னுரிமை கொடுத்து மத்திய அரசு செயற்படும்''- என்றார். இதன்மூலம் மத்திய அரசு ஏழைகள், நடுத்தர மக்கள், தொழில் செய்பவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் அளிக்க முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் மோடி தனது அதிரடித் திட்டத்தை அறிவிப்புகளாக வெளியிடக் கூடாது என்று முடிவு செய்துள்ளார். அதற்குப் பதில் மத்திய பட்ஜெட்டில் அந்தச் சலுகைகளை அறிவிக்க முடிவு செய்துள்ளார். எனவே எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தாக்கல் செய்யப்பட உள்ள மத்திய அரசின் பட்ஜெட் ஏழைகள், நடுத்தர மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஏராளமான சலுகைகளை கொண்டதாக இருக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

மாநில நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய தீர்ப்பாயம் அமைக்க முடிவு

நீர் வளத்துறை அமைச்சகம் முடிவு

சென்னை, டிசெ.20

மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஒரே நதிநீர் தீர்ப்பாயம் அமைக்க மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு மாநிலங்கள் நடுவே நதிநீர் பிரச்சினைகள் தொடர்கின்றமையால், அவற்றுக்குத் தீர்வு காண மத்திய நீர்வளத் துறை இம்முடிவை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு நதிநீர் சிக்கல் தொடர்பான வழக்குகளையும் விசாரித்து இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்ப்பு வழங்குவதாக இந்தத் தீர்ப்பாயம் அமையும். இதற்காக, மாநிலங்கள் நடுவேயான நதி நீர் தாவா சட்டம் தொடர்பில் 1956 இல் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி ஒரு திட்டம் இருப்பதை மத்திய அரசின் நீர்வளத்துறை செயலாளர் சசி சேகரும் உறுதி செய்துள்ளார்.

தீர்ப்பாயத்துடன் சேர்த்து, டி.ஆர்.சி என்ற குழு உருவாக்கப்படும். இதில் நீர் வளத்துறை நிபுணர்கள் இடம் பெற்றிருப்பார்கள். தீர்ப்பாயத்துக்கு வழக்கு வரும் முன்பாக இந்தக் குழு விசாரணையை நடத்தும் என்றும் கூறப்படுகின்றது.

மத்திய அரசின் இந்த முடிவால் காவிரி மேலாண்மை வாரியம் அமைவதில் தொடர்ந்து சிக்கல் ஏற்பட்டுள்ளது.

காவிரி தொடர்பான வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசின் இந்தப் புது முடிவால், காவிரி மேலாண்மை வாரியம் தேவையில்லை என்று நீதிமன்றம் கருத வாய்ப்புள்ளது. (எ)

தேசிய கீதத்தை அவமதித்த கேரள எழுத்தாளர் கைது

திருவனந்தபுரம், டிசெ.20

தேசிய கீதத்தை அவமதிக்கும் வகையில் பேஸ்புக்கில் கருத்து பதிவு செய்தார் எனக் கூறி கேரள எழுத்தாளர் கமல் சி.சவரா கைது செய்யப்பட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நாடு முழுவதும் உள்ள சினிமாத்தியேட்டர்களில் திரைப்படம் திரையிடுவதற்கு முன்னர் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற நடை முறை தற்போது கடைப் பிடிக்கப் பட்டு வருகிறது.

இந்தநிலையில், கொல்லம் மாவட்டத்தில் உள்ள கருனகப்பள்ளி பொலிஸ் நிலையத்தில் கமல் சி.சவரா மீது தேசிய கீதத்தை அவமதித்ததார் என பா.ஜ.கவின் இளைஞர் பிரிவான யுவா மோர்சா அமைப்புச் சார்பில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. (எ)

3 முகங்களுடன் பிறந்த அதிசய ஆட்டுக்குட்டி!

ஈரோடு, டிசெ.20

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் மூன்று முகங்களுடன் அதிசய ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.

ஈரோட்டின் டி.என். பாளையத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளியான சுப்பிரமணி, இவர் தனது வீட்டில் மூன்று ஆடுகளை வளர்த்து வருகிறார்.

அவற்றில் ஓர் ஆடு இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது.

அதில் ஒரு குட்டி அதிசயமாக மூன்று முகத்துடன் பிறந்துள்ளது.

நான்கு கண்களுடன் பிறந்த குட்டியைப் பொது மக்கள் வியந்து பார்த்துச் செல்கின்றனர். (எ)

மணிப்பூரில் வன்முறை; ஊரடங்கு உத்தரவு

இம்பால், டிசெ.20

மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறையின் போது வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இதனால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மணிப்பூர் மாநிலத்தில் 7 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்து இருந்தது. இதனால் கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐக்கிய நாகா சபை அமைப்பினர், மணிப்பூர் முழுவதும் காலவரையற்ற பொருளாதார முற்றுகைப் போராட்டத்தில் குதித்து உள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பயங்கரவாதிகளும் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் மணிப்பூர் நாகா மக்கள் முன்னணி என்னும் பயங்கரவாத அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை நாகாராம் என்னும் இடத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் 3 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

ஐக்கிய நாகா சபையின் போராட்டம் காரணமாக மணிப்பூர் மாநிலத்துக்கு உணவு மற்றும் இதர

அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் கையில் பணமின்றித் தவிக்கும் மணிப்பூர் மக்களுக்கு இந்த முற்றுகை பெரும் இடையூறை ஏற்படுத்தி இருக்கிறது.

இதனால் ஐக்கிய நாகா சபையின் முற்றுகைப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த அமைப்பினர் மீது இம்பால் கிழக்கு மாவட்ட பொதுமக்கள், பதில் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த சனிக்கிழமை இரவு பல இடங்களில் வன்முறை வெடித்தது. அப்போது ஏராளமான வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இதையடுத்து வன்முறையைக் கட்டுப்படுத்தும் விதமாக இம்பால் கிழக்கு மாவட்ட ஆட்சியாளர் நேற்றுமுன்தினம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தார். குறிப்பாக மாவட்டத்தின் போரோம்பட் மற்றும் சுவோம் பங்க் ஆகிய துணை வட்டாரப் பகுதிகளில் ஊரடங்கு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

வதந்தி பரவுவதைத் தடுக்கும் விதமாக இணையத்தள மற்றும் செல்போன் சேவைகளும் முடக்கப்பட்டன. (எ)

2016 உலக அழகியாக அமெ.கல்லூரி மாணவி

வொஷிங்டன், டிசெ.20

2016 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தைப் போர்ட்டோரிக்கோவைச் சேர்ந்த ஸ்டெபானி டெல்வாலே என்பவர் வென்றுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற 66 ஆவது உலக அழகிப்போட்டியின் இறுதிச்சுற்றில் 19 வயதுடைய ஸ்டெபானி டெல்வாலே என்ற கல்லூரி மாணவி வென்றுள்ளார். டொமினிக்கன் குடியரசு, இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் 2,3 ஆம் இடங்களைப் பிடித்தார்கள்.

டெல்வாவே ஸ்பெயின், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய மொழிகளைச் சரளமாகப் பேசக்கூடியவர்.

உலக அழகியாக தெரிவு செய்யப்பட்ட இவருக்கு 2015 ஆம் ஆண்டு பட்டம் வென்ற ஸ்பெயின் அழகி மிரேயா லலாகுனா கிரீடம் சூட்டினார்.

50 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். (எ)

ஜோர்டானில் துப்பாக்கிச் சூடு; 9 பொலிஸார் சாவு

அம்மான், டிசெ.20

ஜோர்டானில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் 9 பேர் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் இருந்து தெற்குப் பகுதியில் 120 கி.மீற்றர் தொலைவில் உள்ள பிராந்தியம் கரக். மலைப் பகுதிகளை அதிகமாகக் கொண்ட இந்த நகரம் சுற்றுலாத்துறைக்குப் பெயர்போனது. அங்கு மிகப் பெரிய சிலுவைப் போர் அரண்மனை உள்ளது. அங்குள்ள பொலிஸ் நிலையத்தை நோக்கி மர்ம நபர்கள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 9 பொலிஸார் உயிரிழந்தனர். அவர்களுடன் கனடாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவரும் பரிதாபமாக உயிரிழந்தார். (எ)

ஐ.எஸ்.தலைவனின் தலைக்கு 150 கோடி ரூபா பரிசுத்தொகை

வொஷிங்டன், டிசெ.20

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத் தலைவன் அபூபக்கர் பாக்தாதியின் தலைக்கு அமெரிக்கா 2.5 கோடி டொலரை (150 கோடி ரூபா) பரிசுத்தொகையாக அறிவித்துள்ளது.

ஈராக்கில் உள்ள மொசூல் நகரில் இருந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிக்க ஈராக் இராணுவப் படைகளுடன் அமெரிக்க விமானப்படையும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத் தலைவன் அபூபக்கர் பாக்தாதியின் தலைக்கு அமெரிக்கா, ஒரு கோடி டொலர் பரிசு அறிவித்திருந்தது. இதற்கிடையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஈராக் படைகள் நடத்திய தாக்குதலில் அபூபக்கர் பாக்தாதி படுகாயமடைந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்றும் ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதை அதிகார பூர்வ அறிவிப்பாக ஏற்றுக் கொள்ள அமெரிக்க அரசு மறுத்து விட்டது. அவன் இன்னும் உயிருடன் இருக்கிறான் என அமெரிக்க உளவுத் துறைக்கு நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில், அபூபக்கர் பாக்தாதியின் தலைக்கு இரண்டரைக் கோடி டொலர் (இந்திய மதிப்புக்குச் சுமார் 150 கோடி) பரிசாக அளிக்கப்படும் என்று அமெரிக்க அரசின் நீதிக்கான பரிசுத் திட்ட இயக்குநரகம் தற்போது அறிவித்துள்ளது.(எ)

ஜப்பானில் மீண்டும் பறவைக் காய்ச்சல்

டோக்கியோ, டிசெ.20

ஜப்பானில் மீண்டும் பறவைக் காய்ச்சல் பரவுகின்றதால் 2 லட்சம் பறவைகளை அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்தான் அந்த நாட்டின் நீகிட்டா நகரத்தில் பறவைக்காய்ச்சல் தாக்கி 5 லட்சம் கோழிகள், 23 ஆயிரம் வாத்துகள் கொன்று புதைக்கப்பட்டன.

இந்நிலையில் அங்கு ஹொக்கைடோ தீவுப் பகுதியில் பறவைக் காய்ச்சல் மீண்டும் பரவி வருவது மக்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதைடுத்து அங்கு 2 லட்சத்து 10 ஆயிரம் கோழிகளையும், வளர்ப்பு பறவைகளையும் கொன்று புதைக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதைத் தொடர்ந்து அவற்றைக் கொன்று புதைக்கும் பணி நடைபெற்று வருகிறது.(எ)

ரஷ்ய பாதுகாப்பு விமானம் விபத்து; அதில் பயணித்த 16 பேர் காயம்!

மொஸ்கோ, டிசெ.20

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சுக்குக்குச் சொந்தமான ஐ.எல் -18 என்ற பயணிகள் விமானம் நேற்று விபத்துக்குள்ளானது. இதில் 16 பேர் காயம் அடைந்தனர் என்று அந்தநாட்டு பாதுகாப்புச் செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த விமானத்தில் சுமார் 32 பயணிகள் மற்றும் 7 விமானப் பணியாளர்கள் பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாதாரண காலநிலை காரணமாக அந்த விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்துக்கு 8 ஹெலிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

அணு ஆயுதத் திட்டம் இணங்கியது ஈரான்

நியூயோர்க், டிசெ.20

அணு ஆயுதத் திட்டம் தொடர்பான யோசனைகளுக்கு ஈரான் இணக்கம் வெளியிட்டுள்ளது என ஐக்கியநாடுகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. உலக முக்கிய நாடுகளால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள ஈரான் அரசு இணங்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

ஈரானுக்கும் உலக நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான யோசனை திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என சர்வதேச அணுமுகவர் நிறுவன பணிப்பாளர் நாயகம் யூகியா அமெனோ தெரிவித்துள்ளார். ஈரானிய அணுத் திட்டத் தலைவர் அலி அக்பரைச் சந்தித்தார் அதன் பின்னர் அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.(எ)

அலெப்போவில் மீண்டும் வெளியேறும் மக்கள்

டமஸ்கஸ், டிசெ.20

சிரியத் தலைநகர் அலெப்போவின் கிழக்குப் பகுதியில், கிளர்ச்சியாளர்களின் பிடியில் சிக்கியுள்ள பகுதிகளில் இருக்கும் மக்களை மீட்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 350 பேருடன் ஐந்து பஸ்கள் மற்றும் ஓர் அம்புலன்ஸ் என்பன புறப்படத் தயாராக உள்ளன என்று அதிகாரி ஒருவர்

தெரிவித்துள்ளார்.

அலெப்போவின் மேற்குப் பகுதியில், கிளர்ச்சியாளர்களால் முற்றுகையிடப்பட்ட அரச பிடியில் இருக்கும் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றச் சென்ற ஏனைய பஸ்கள் மீது அடுத்தடுத்து நடத்தப்பட்ட ஆயுதத் தாக்குதல்களால் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது.

கிழக்கு அலெப்போவில் மக்களை வெளியேற்றும் பணியை ஐ.நா. குழுக் கண்காணிக்க அனுமதிக்கும் தீர்மானம் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வாக்களிக்க உள்ளது.

முன்னதாக பல தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், தற்போது இயற்றப்பட்டுள்ள தீர்மான வாசகங்கள் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (எ)

ஈராக்கில் மனித உரிமை மீறல்; ஐ.நா.குற்றச்சாட்டு

பக்தாத், டிசெ.20

ஈராக்கில் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக் குழு ஒன்று, ஐ.எஸ் குழுவுக்கு ஆதரவாக போரில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட 4 கைதிகளை எவ்வித விசாரணைகளும் இன்றி கொன்றுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக் பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அவர்கள் இதனைத் தடுக்க வில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் மொசூல் அருகே ஐ.எஸ் போராளிகளை விரட்டும் பணியில் ஈராக்கியப் படைகள் ஈடுபட்டிருந்தன. இதன்போது, இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பழங்குடியின ஆயுதக் குழுக்கள் தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் இதுவரை தான் பெறவில்லை என்று அரச தொலைக்காட்சிக்கு ஈராக் பிரதமர் ஹைதர் அல்- அபாடி தெரிவித்துள்ளார். (எ)

சதாம் கொல்லப்பட்டிருக்கக் கூடாது! விசாரணை அதிகாரி அதிர்ச்சித் தகவல்

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கொல்லப்பட்டிருக்கக் கூடாது என்று அவரை விசாரணைக்குட்படுத்திய அதிகாரியான ஜோன் நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனை விசாரணைக்கு உட்படுத்திய ஜோன் நிக்ஸன் எழுதியுள்ள Debriefing The President: The Interrogation Of Saddam Hussein என்ற நூலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைன் தன்னிடம் ''அமெரிக்கா நினைப்பதைப் போன்று அரபு மொழியையும் எம் மக்களையும் புரிந்து செயற்பட முடியாது.

"எமக்குள்ளேபல்வேறு கலாசார மற்றும் சமூக செயற்பாடுகள் அடங்கியுள்ளன. அதனை உள்ளூர் நபர்களைத் தவிர வெளி நாட்டவர்களால் சரியான முறையில் பின்பற்ற முடியாது" என்று கூறினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஈராக்கிற்குள் பிளவுப்பட்டிருந்த பல்வேறு சமூகத்தினரை ஒன்று சேர்ப்பதில் அவர் வெற்றி கொண்டிருந்தார்.

எப்போதும் தனது நாட்டு மக்களின் நலனில் குறியாக இருந்த தலைவர் அவர். அவர் கட்டாயமாகத் தண்டிக்கப்பட்டிருக்கக் கூடாது.

மாறாக ஈராக்குக்கே திருப்பி அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று ஜோன் நிக்ஸன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சதாம் ஹுசைனின் 2003 ஆம் ஆண்டு ஆட்சிக் காலப்பகுதியில் ஈராக்கில் அணுவாயுத நடவடிக்கைகள் இடம்பெற்றன என்று குற்றம் சுமத்தப்பட்டு அமெரிக்காவால் ஆட்சி கவிழ்க்கப்பட்டார்.

பின்னர் பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டு 2006 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். (எ)

மண்ணுக்காகப் போராடிய நாங்கள் அந்த மண்ணையே கொல்கிறோம்

மண்வளம் தொடர்பான கருத்தமர்வில் அமைச்சர் ஐங்கரநேசன் வேதனை

யாழ்ப்பாணம், டிசெ.20

மூன்று தசாப்த காலப் போர் மண்ணுக்காகவே நடைபெற்றது. 'இந்த மண் எங்களின் சொந்த மண் இதன் எல்லையை மீறி யார் வந்தவன்' என்று மண் மீட்புக்காகவேநாம்போராடினோம். ஆனால், மண்ணுக்காகப் போராடிய நாங்களே இன்று அந்த மண்ணை அளவுக்கு அதிகமான விவசாய இரசாயனப் பாவனையால் கொலை செய்து வருகிறோம்.

- இவ்வாறு வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் உலக மண் தினத்தை முன்னிட்டு 'மண்ணும் அவரையங்களும் - உயிர் வாழ்வதற்கான ஒரு கூட்டு' என்றகருப்பொருளில் கருத்தமர்வு நேற்றுத் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

மண்ணைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. வீடுகளில் நுழையும்போது வாசற் கதவருகில் காற்பாதங்களில் உள்ள மண்ணைத் தட்டி விட்டுச் செல்வதுதான் மண் பற்றிய பெரும் பாலானோரது கவனமாக உள்ளது. காலடியில் உள்ளஅந்தமண்நாளுக்கு நாள் வளம் இழந்து போவது பற்றி நாம் அக்கறைப்படுவதில்லை.

மண்ணுக்கு உயிர் உள்ளது. உலகின் உயிர்ப் பல்வகைமையில் நான்கில் ஒரு பங்கு உயிரினங்கள் மண்ணுக்குள்தான் வாழுகின்றன. ஒரு தேக்கரண்டி வளமான மண்ணில் மில்லியன் கணக்கான பக்ரீரியாக்களும் பல மீற்றர்கள் அளவுக்குப் பூஞ்சணை இழைகளும் காணப்படுகின்றன. மண்ணின் வளத்துக்கு, கனியுப்புக்களின் சுழற்சிக்கு இவைஅவசியம். ஆனால், அளவுக்கு அதிகமான விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் மண் உயிரினங்களைச் சாகடித்து வருகிறோம்.

பக்ரீரியாக்களும் பங்கசுக்களும் இல்லாத மண்ணில் எவ்வளவுதான் இரசாயன உரங்களைப் போட்டாலும் பயிர்கள் செழிப்பாகவளராது. உரங்களைப் போடப் போட மண் மேலும்மேலும் தரமிழந்து கடைசியில் தரிசு நிலமாகவே மாறும்.

எமது விவசாயிகளில் பெரும்பாலானோர் இப்போது ஒரு போகத்துடன் பயிர்ச் செய்கையை மட்டுப்படுத்திவிடுகிறார்கள். அவரை இனத் தாவரங்களை இடைப்பட்ட போகங்களில் சுழற்சியாகப் பயிரிடும் முறைமைக்கு விவசாயிகள் மீளவும் திரும்ப வேண்டும். உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கு மாத்திரம் அல்ல காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதற்கும் மண்வளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

பூமி வெப்பம் அடைவதற்குக் காபனீரொக்சைட்டு வாயுவின் அளவு வளியில் அதிகரித்து வருவதே பிரதான காரணம். காபனீரொக்சைட்டு வாயுவைத் தன்னில் கரைத்து, வளியில் அதன் சமநிலையைப் பேணுவதில் முதலாவது இடத்தில் சமுத்திரங்கள் உள்ளன. இரண்டாவது மிகப் பெரும் காபன் தொட்டியாக மண்ணே உள்ளது. அந்த வகையிலும் மண்ணின் வளத்தை நாம் பாதுகாக்க வேண்டியவர்களாகவே உள்ளோம். - என்றார்.

நிகழ்வில் வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ். பல்கலைக்கழக பயிரியல் துறையின் தலைவர் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், புவியியற்றுறையின் முன்னாள் தலைவர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன், உலக உணவு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் க.பத்மநாதன், மத்திய விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.எம்.ஏ. கேந்திரகம, பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பிரதிப் பணிப் பாளர் கலாநிதி எம்.எஸ். நியாமுடின், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் கலாநிதி ரீ.கருணைநாதன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர்களான அஞ்சனா தேவி சிறீரங்கன், பூ.உலகநாதன், அ.செல்வராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

தமிழ்மொழியில் தொலைபேசி மூலம் இதுவரையில் 203 முறைப்பாடுகள்!

வவுனியா டி.ஐ.ஜி. அலுவலகம் தகவல்

வவுனியா, டிசெ.20

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் டி.ஐ.ஜி. அலுவலகத்துக்குத் தொலைபேசிமூலம்தமிழ்மொழியில் இதுவரை 203 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் தொலைபேசி சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபரால் கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி வவுனியா- மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இந்த சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் தமிழ் மொழியில் முறைப்பாடு செய்யும் திட்டத்தில் இதுவரை 203 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 115 முறைப்பாடுகளும், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 55 முறைப்பாடுகளும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் இருந்து 33 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

முறைப்பாட்டை அடுத்து விரைத்து செயற்பட்ட பொலிஸார் பல குற்றச்செயல்களைத் தடுத்துள்ளனர். அத்துடன் சில செயற்பாடுகளுக்குஎதிராகத்துரிதமாகநடவடிக்கைகளையும் எடுத்திருந்தனர்.

குறிப்பாக மரக்கடத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களைத் தண்டித்தல், பாடசாலை சீருடை துணி விநியோக முறைகேடு, இளைஞர் மோதல், பொது இடத்தில் மது அருந்துதல், விபத்துக்கள் என்பன தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 ஐ விட இதன் சேவைகள் விரைவாக இடம்பெறுகின்றன என்று பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தில் தமிழ் மொழி மூல முறைப்பாடுகளுக்காக 0766224949, 0766226363 ஆகிய இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

போதையில் வாகனம் செலுத்திய 83 சாரதிகள் வவுனியாவில் கைது

வவுனியா, டிசெ.20

வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மது போதையில் வாகனம் செலுத்திய 83 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தை அடுத்து பொலிஸார் நேற்று முன்தினம் இந்த விசேட சுற்றி வளைப்பை முன்னெடுத்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு ஆரம்பமான இந்த சுற்றிவளைப்பு இரவு 10 மணிவரை முன்னெடுக்கப் பட்டது. இதன் போது மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் கண்டறியப்பட்டனர் என்றும் இதன்போது 83 சாரதிகள் கைது செய்யப் பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

தைப்பொங்கல் தினத்தன்று வல்வையில் பட்டப் போட்டி

வடமராட்சி, டிசெ.20

வல்வெட்டித்துறை விக்கினேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தால் நடத்தப்படும் மாபெரும் வல்வையின் பட்டப்போட்டித் திரு விழா, எதிர்வரும் 14ஆம் திகதி சனிக் கிழமை தைப் பொங்கல் தினத்தன்று பிற்பகல் 2மணிக்கு மடத்தடி உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

கற்பனைத் திறனையும், கை வண்ணத்தையும் ஒன்று சேர்த்த கற்பனையில் அல்லாத சித்திரப் பட்டங்கள் மட்டுமே பட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். பட்டங்களை வானில் பறக்கவிட்டு பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தும் சித்திரப் பட்டம் ஏற்றும்போட்டியில் பங்குபற்றுவோர் வல்வெட்டித்துறை மடத்தடியில் உள்ள வல்லை விக்கினேஸ்வரா சனசமூகசேவா நிலையத்தில் தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டப் போட்டித் திருவிழாவில் வெற்றி பெறுவோருக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதிமிக்க பரிசில் பொருள்களும், பணப் பரிசில்களும் வழங்கப்பட உள்ளன. (இ-30)

உரும்பிராயில் இன்று ஸ்ரீ சாரதாதேவி ஜெயந்திவிழா

உரும்பிராய், டிசெ.20

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 164 ஆவது ஜெயந்தி விழா, இன்று மாலை 4 மணிமுதல் 6 மணிவரை மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி சுசீலாதேவி சாரங்கபாணி கலந்து கொள்வார்.

ஜெயந்தி விழாவில் பஜனை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

பரபரப்பான ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது ஆஸ்திரேலிய அணி!

பிரிஸ்பேன், டிசெ.20

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி போராடித் தோற்றுள்ளது. பரபரப்பாக நடந்துமுடிந்த இந்த டெஸ்ட் போட்டியில் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று ஆஸ்திரேலிய அணி தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையேயான போட்டி கடந்த 15 ஆம் திகதி தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா, முதல் இன்னிங்ஸில் 130.1 ஓவர்களில் 429 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்து ஆடிய பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் 55 ஓவர்களில் 142 ஓட்டங்களில் சுருண்டது. இதையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா, 39 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பின்னர், 490 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு தனது 2 ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய பாகிஸ்தான், 4 வது நாள் ஆட்ட நேர முடிவில், 123 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 382 ஓட்டங்களை எடுத்தது.

சதம் கடந்த அசாத் ஷபிக் 100, யாசிர் ஷா 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

வெற்றி பெறுவதற்கு இன்னும் 108 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில், பாகிஸ்தான் வசம் 2 விக்கெட்டுகளே இருந்தன.

ஆனாலும், கடைசி நாளான நேற்று ஆஸாத் - யாசிர் ஷா ஆகிய இருவரும் மன உறுதியுடன் ஆடினார்கள்.

இதனால், பாகிஸ்தான் அணி வெற்றிக்கு மிக அருகில் செல்லும் நிலை உருவானது. பரபரப்பான கட்டத்தில், 137 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த அசாத்தை அற்புதமான பந்தினால் ஸ்டார்க் வீழ்த்தினார்.

இதன்பின்னர் யாசிர் ஷா 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்து பாகிஸ்தான் ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தார். கடுமையாகப் போராடி 450 ஓட்டங்கள் குவித்தாலும் பாகிஸ்தான் அணியால் வெற்றியை நெருங்கமுடியாமல் போனது.

தோற்றுப்போய்விடும் நிலையில், இருந்த ஆஸ்திரேலிய அணி இறுதியில் 39 ஓட்டங்களால் வெற்றி பெற்று, 1-0 என டெஸ்ட் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

வடக்கின் வர்ண விருது விழா நாளை: அனித்தாவுக்கு நட்சத்திர விருது

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கின் வர்ண விருது விழா நாளை நடைபெறவுள்ளது.

வெளிநாடுகளிலும் இலங்கையிலும் இவ்வருடம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தேசத்துக்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமையும் புகழும் ஈட்டிக் கொடுத்த வடக்கு மாகாண விளையாட்டு வீர, வீராங்கனைகள் இவ் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்வருடத்திற்கான வடக்கின் விளையாட்டுத் துறை நட்சத்திர விருது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா ஜெகதீஸ்வரனுக்கு வழங்கப் படவுள்ளது.

அனித்தா, இவ் வருடம் நடைபெற்ற 42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் 3.41 மீற்றர் உயரத்தைத் தாவிப் பாய்ந்து புதிய தேசிய சாதனையை நிலைநாட்டியுள் ளார்.

மேலும், பல்வேறு மெய் வல்லுநர் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளார்.

இதற்காக அனித்தாவுக்கு இந்த விருதை வழங்க வடக்கு மாகாண வர்ண விருது விழா ஏற்பாட்டுக் குழுவினர் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

வடக்கு மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களம், கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏழாவது தடவையாக ஏற்பாடு செய்துள்ளன.

வடக்கு மாகாண விளையாட்டுத்துறை வர்ண விருது விழா சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு பதங்கங்களை வென்ற ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த வீரர்களுக்கும் இந் நிகழ்வில் விசேட விருதுகள் வழங்கப் படவுள்ளன.

இந் நிகழ்வில், கல்வி அமைச்சு, விளையாட்டுத் துறைச் சங்கங்கள் ஆகியன இவ் வருடம் நடத்திய போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்கள் வென்ற மற்றும் அடைவுமட்டத்தை எட்டிய வீர, வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள் வழங்கப் படவுள்ளன.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரனின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் 300 இற்கும் மேற்பட்ட வடக்கு மாகாண விளையாட்டு வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தனி நபர் போட்டி நிகழ்ச்சிகள், அணி நிலைப் போட்டி நிகழ்ச்சிகள் ஆகிய வற்றில் பிரகாசித்தவர்களுக்கு வர்ண விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மாகாணக் கல்வி அமைச்சர் பி. குருகுலராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரதான பரிசில்களை வழங்கவுள்ளார்.

பாகிஸ்தான் வீரர் அசாத் சாதனை!

பிரிஸ்பேன், டிசெ.20

பாகிஸ்தான் அணி வீரர் அசாத் ஷபிக் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதல் டெஸ்டில் சதம் அடித்த தன் மூலம் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்

இவர் 6 ஆவது வீரராகக் களம் இறங்கி 9 சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பாகிஸ்தான் அணியின் சோபர்ஸ் 8 சதங்கள் அடித்ததே அதிக பட்ச சதமாக இருந்தது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி:

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், ஆப்கானிஸ்தான் அணிகள் வெற்றி

கொழும்பு, டிசெ.20

இலங்கையின் நான்கு மைதானங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மலேஷியா ஆகிய நாடுகள் வெற்றிபெற்றுள்ளன.

இப் போட்டி முடிவுகளை அடுத்து நடப்பு சம்பியன் இந்தியா மாத்திரமே இது வரை தோல்வி அடையாத அணியாகத் திகழ்கின்றது.

மொறட்டுவையில் நடைபெற்ற இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 'ஏ' குழு போட்டியில் இந்தியா 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் இலங்கை தோல்வி அடைந்த போதிலும் 'ஏ' குழுவில் இரண்டாம் இடத்தைப் பெற்றதன் மூலம் இந்தியாவுடன் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை, என். சி. சி. மைதானத்தில் நடைபெற்ற ஏ குழுவுக்கான மற்றைய போட்டியில் மலேசியாவை ஒரு விக்கெட்டால் நேபாளம் வெற்றிகொண்டது.

காலியில் நடைபெற்ற 'பி' குழுவில், பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான போட்டியில் ஒரு பந்து மீதமிருக்க ஒரு விக்கெட்டால் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

மேலும், மக்கொன சரே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சிங்கப்பூரை 9 விக்கெட்டுகளால் ஆப்கானிஸ்தான் வெற்றிகொண்டது.

கருண் நாயரின் கன்னிச் சதத்தால் முன்னிலை பெற்றது இந்திய அணி!


முச்சதம் அடித்த களிப்பில் கருண் நாயர்

சென்னை, டிசெ.20

இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட் போட்டியில், கருண் நாயரின் கன்னிச் சதத்தால் இந்திய அணி 500 ஓட்டங்களைக் கடந்து முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடை பெற்று வருகிறது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 477 ஓட்டங்களைக் குவித்தது. மொயின் அலி 146 ஓட்டங்களை எடுத்தார். ரவிந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்தியா நேற்று முன்தினம் 3 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் ஒரு ஓட்டத்தில் இரட்டை சதத்தை தவற விட்டார். அவர் 199 ரன் குவித்தார். கருண் நாயர் 71 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 17ஓட்டங்களுடனும், ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. 86 ஓட்டங்கள் பின்தங்கிய நிலை, கைவசம் 6 விக்கெட் என்ற நிலையில் இந்திய அணி தொடர்ந்து விளையாடியது.

ஆட்டம் தொடங்கிய 3 ஆவது ஓவரில் பிராட் பந்தில் கருண் நாயர் பவுண்டரி அடித்தார். அதற்கு அடுத்த ஓவரில் இந்தியா 400 ஆவது ஓட்டத்தைக் குவித்தது. 111.2 ஆவது ஓவரில் இந்த ஓட்டப் பெறுதியைப் பெற்றது. கருண் நாயரும், முரளி விஜய்யும் தொடர்ந்து நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

கருண் நாயர் மிகவும் சிறப்பாக விளையாடிச் சதம் அடித்தார். 99 ஓட்டங்களில் இருந்து பவுண்டரி மூலம் அவர் 100 ஓட்டங்களைத் தொட்டார். 185 பந்துகளை சந்தித்து 8 பவுண்டரி, 1 சிக்சருடன் அவர் சதத்தை பதிவு செய்தார்.

3 ஆவது டெஸ்டில் விளையாடும் கருண் நாயர் தனது இந்த முதல் சதத்தை எடுத்தார்.

முரளி விஜய், டோசனின் பந்துவீச்சில் 29 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். தொடர்ந்து வந்த அஸ்வின் 67 ஓட்டங்களையும், ஜடேஜா 51 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். கருண் நாயர் 303 ஓட்டங்களுடனும், ஜாதவ் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றைய நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 759 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஓட்டங்களை குவித்தது இலங்கை!

பொட்சேபி, டிசெ.20

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி ஓட்டங்களைக் குவித்துள்ளது.

தென்னாபிரிக்கா சுற்றுத் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பொட்சேபிஸ்ட்ரூம் சென்வெஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 328 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் கவுஷல் சில்வா 80 ஓட்டங்களையும், கருணாரத்ன 71 ஓட்டங்களையும், தனஞ்சயன் டி சில்வா 57 ஓட்டங்களையும், மென்டிஸ் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி போட் எலிசபெத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டம்: கொல்கத்தா அணி சம்பியனானது!

கொச்சி டிசெ.20

இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) உதைபந்தாட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தொடரில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணியை வீழ்த்தி, அட்லெடிகோ டி கொல்கத்தா அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இதற்கு முன்னர், ஐ.எஸ்.எல். ஆரம்ப தொடரில் (2014 ஆண்டு) பட்டத்தை வென்ற கொல்கத்தா, தற்போது 2 ஆவது முறையாக சம்பியனாகியுள்ளது.

கொச்சியில் ஜவாஹர்லால் நேரு மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதிச் சுற்றில் கேரளா-கொல்கத்தா அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடை பெற்ற இந்த ஆட்டத்தில் கேரளா முதல் கோல் அடித்தது. ஆட்டத்தின் 37 ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு கோர்னர் கிக் வாய்ப்பு கிடைத்தது. கேரளாவின் மெஹ்தாப் ஹொஸன் அடித்த அந்தப் பந்தை, முகமது ரபி தலையால் முட்டி துல்லியமான கோலாக்கினார்.

எனினும், அடுத்த 7 நிமிடங்களில் அதற்கு பழி வாங்கியது கொல்கத்தா. ஆட்டத்தின் 44 ஆவது நிமிடத்தில் கொல்கத்தாவுக்கு கிடைத்த கோர்னர் கிக்கை, அந்த அணியின் டௌட்டி கர்லஸ் அடிக்க, கோல் போஸ்ட் அருகே நின்ற சக வீரர் செரினோ அந்தப் பந்தை தலையால் முட்ட முனைந்தார்.

அப்போது, கேரளத்தின் தடுப்பாட்டக்காரர் சந்தேஷ் தோளைப் பிடித்து அழுத்தி தடுத்தபோதும், மீறி பந்தை தலையால் முட்டி செரினோ கோலடித்தார். இதனால், ஆட்டம் முதல் பாதியிலேயே 1-1 என சமன் ஆனது. தொடர்ந்து நடை பெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்திலும் இரு அணிகளுமே கோல் அடிக்காத தால், கூடுதல் நேரம் (30 நிமிடங்கள்) வழங்கப் பட்டது. அதிலும் இரு அணிகளுமே கோல் ஏதும் அடிக்காததை அடுத்து, வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்ட்டி ஷூட் முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் 4-3 என்ற கோல் கணக்கில் கொல்கத்தா வெற்றி பெற்றது.

கிளப் உலகக் கோப்பையை வென்றது ரியல் மாட்ரிட்

யோகோஹமா, டிசெ.20

கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ஹட்ரிக் கோலால் ஜப்பான் கிளப் அணியை வீழ்த்தி கிளப் உலகக் கோப்பையை ரியல் மாட்ரிட் கைப்பற்றியுள்ளது.

கிளப் உலகக் கோப்பை இறுதிப் போட்டி ஜப்பானில் உள்ள யோகோஹாமாவில் நடைபெற்றது. இதில் ஸ்பெயினின் முன்னணி கிளப் அணியான ரியல் மாட்ரிட்-ஜப்பானின் கஷிமா அன்ட்லெர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

ரியல் மாட்ரிட் அணியின் கரிம் பென்சிமா முதல் கோலைப் பதிவு செய்தார். அதற்குப் பதிலடியாக கஷிமா அன்ட்லெர்ஸ் அணியின் ககு ஷபாசகி அடுத்தடுத்து இரண்டு கோல்கள் அடித்து ரியல் மாட்ரிட் அணிக்கு அதிர்ச்சி அளித்தார்.

ஆனால், ரியல் மாட்ரிட் அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்தார். இதனால், ரியல் மாட்ரிட் 4-2 என வெற்றி பெற்றது.

பெனால்டி வாய்ப்பு மூலம் முதல் கோலை அடித்த ரொனால்டோ, அதன்பின் கூடுதல் நேரத்தில் மேலும் இரண்டு கோல்கள் அடித்தார். இந்த வெற்றியின் மூலம் ரியல் மாட்ரிட் கடந்த மூன்று வருடத்தில் இரண்டு முறை இந்த உலகக் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.

செவிப்புலன் வலுவற்றோர் நிறுவன கிறிஸ்தவ கழகத்தின் நத்தார் விழா

யாழ். செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தின் கிறிஸ்தவ கழகம் ஏற்பாடு செய்த நத்தார் விழா கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கலட்டியில் அமைந்துள்ள நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மத போதகர்கள், துறைசார் அதிகாரிகள், நிறுவன உறுப்பினர்கள், குழந்தைகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (மு)

பரீட்சைப் பணியில் கணவர்; பரீட்சை எழுதினார் மனைவி!

நடந்து முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது தீவகப் பகுதியில் பரீட்சை இணைப்பு அலுவலகத்தில் அதிகாரி ஒருவர் உதவி இணைப் பாளராகப் பணியாற்றிய அதே சமயத்தில், அவரது மனைவி தீவகத்தில் பிறிதொரு இடத்தில் அதே பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என்பது பரீட்சைத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இதையடுத்து, இந்த விடயம் குறித்து பரீட்சைத்திணைக்களம் ஆராயத் தொடங்கியிருப்பதாகவும் தெரிகின்றது.

ஒருவரின் இரத்த உறவினர் யாரேனும் பரீட்சை எழுதுவார்களாயின் அப்பரீட்சை தொடர்பான கடமையில் அவர் சம்பந்தப்பட முடியாது என்பது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் கடுமையான விதிமுறையாகும்.

ஆனால், தீவகத்தில் நயினாதீவுப் பகுதியில் கணவர் பரீட்சைக்கான உதவி இணைப்பு அதிகாரியாகச் செயற்பட, அதே சமயம் மறுபுறத்தில் அனலைதீவில் ஒரு பரீட்சை நிலையத்தில் அவரது மனைவி பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட கணவர் சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி வருபவர். மனைவி தொண்டர் ஆசிரியர் நியமனத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பவர் என்று கூறப்பட்டது. (உ)

வவுனியாவில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

வவுனியா, டிசெ.20

வவுனியாவில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். நேற்று திங்கட்கிழமை மாலை வவுனியா நீலியாமோட்டையில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பனங்காமம் பகுதியைச் சேர்ந்த எஸ்.குணசிங்கம் (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர், நீலியாமோட்டை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள காணியில் நேற்று மாலை மாடு அடைக்கச் சென்றார். அப்போதே அவர் யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது.

அந்தக் காணியில் அவர் சடலமாகக் கிடந்ததை அவதானித்த ஊர்மக்களும், உறவினர்களும் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(மு-100)

மூளைக்காய்ச்சல் நோயால் 5 வயதுக் குழந்தை மரணம்

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சியில் மூளைக் காய்ச்சல் காரணமாக ஐந்து வயதுக் குழந்தை ஒன்று மரண மடைந்துள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றது. கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த விஜயராஜ் விஸ்னுஜன் என்ற குழந்தையே மரண மடைந்தது.

கடந்த சிலதினங்களாக காய்ச்சல் மற்றும் வாந்தி போன்றவற்றால் அவதிப்பட்ட குழந்தை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால், குழந்தை வழியிலேயே இறந்து விட்டது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி திருலோக மூர்த்தி மரண விசாரணையை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

அந்தக் குழந்தை மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(மு-70)

வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று நண்பகல் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தங்கள் மீது குற்றம் இல்லை என்றால் பகிரங்கமாக விசாரணைக்கு அவர்கள் ஒத்துக் கொள்ளலாமே. பொதுவான குற்றச்சாட்டை எதற்காகச் சிலர் தங்கள் மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டாக எடுக்கிறார்கள்?

வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சு மீதான விவாதத்தின் போது வடமாகாண சபைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் கடந்த ஆண்டு 23 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் 1.2 பில்லியன் ரூபா நிதியே செலவிடப்பட்டிருந்தது என்றும் மாகாணசபையின் வினைத்திறன் தொடர்பாக ஆராய வேண்டும் எனவும் சபையில் கூறினார்.

எனவே வினைத்திறன் மட்டுமல்ல. அவர்களுக்கு அந்த விடயத்தில் அக்கறை உள்ளதா என்பதையும் ஆராய வேண்டும். விசாரணை விடயத்தைப் பொறுத்தவரை திருடனைத் திருடனே விசாரிக்க முடியாது.

எதிர்க் கட்சித் தலைவர் நியமனம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் எழுதிய கடிதத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டமைப்பினர் கோஷம்

எல்லாத் தேர்தல்களின் போதும் வாக்குத் திரட்டுவதற்காகக் கூட்டமைப்பினர் ஒரு கோஷத்தையே முன்வைத்து வந்தனர். 'மதங்களுக்கு இடையே சமத்துவம், சமஷ்டி முறை ஆட்சி, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வு பெற்றுத் தருவோம்' என்றனர்.

2016 இல் தீர்வு என்று உறுதியளித்தனர். இன்னும் பத்து நாள்களில் 2016 முடிந்து விடும். இனி அடுத்த ஆண்டு பற்றிப் பேசுவார்கள்.

தீர்வு தொடர்பில் அரசு தனது நிலைப்பாட்டைச் சொல்லிவிட்டது. பௌத்தத்துக்கு முதல் இடம். சமஷ்டி இல்லை. ஒற்றையாட்சிதான். வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை. பெரும்பான்மைத் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இத்தகைய கருத்தே அங்கு வலிமையாக உள்ளது. தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது என்ற ரீதியில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் இப்போது கேள்வி உள்ளது.

புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு

"உங்களுடைய காலத்தில் அற்புதமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைத்தீர்களே. இப்போது அப்படியொரு திட்டத்தை முன்வைக்கவில்லை?" - என்று இந்திய ஊடகம் ஒன்று சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பியது.

"அப்போது புலிகள் இருந்தனர். இப்போது புலிகள் இல்லை. ஆகவே அவ்வாறான தீர்வுத் திட்டத்தை வைப்பது அவசியமற்றது" - என்று அவர் கூறினார்.

புலிகளுக்காகத்தான் தீர்வு என்ற பாணியில் அரசியல் நடத்தியதன் விளைவுதான் இது. இதனால்தான் நாம் ஆரம்பத்திலிருந்து ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்தோம். அது - புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு; புலிகளின் பிரச்சினை வேறு, தமிழ் மக்களின் பிரச்சினை வேறு - என்பது.

அப்போது அப்படி நாம் கூறியமைக்காக எம்மைத் துரோகிகள் என்றனர். புலிகள் எம்மைக் கொல்ல முயன்றனர்.

ஈ.பி.டி.பி. தவிர ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் புலிகளுடையதும் தமிழ் மக்களினுடையதும் பிரச்சினை ஒன்றுதான் என்று தமது சுயலாப அரசியலுக்குச் சொல்லிவந்தனர். அதைத்தான் தெற்கில் உள்ளவர்கள் பிடித்துக் கொண்டு இப்போது புலிகள் இல்லை, பிரச்சினையும் இல்லை என்று கூற முற்படுகின்றனர். அன்றே நாம் இரண்டையும் வேறுபடுத்தி நின்றிருந்தால் இன்று இந்த நிலைமை வந்திருக்காது.

இந்த ஆட்சியைத் தாங்கள்தான் கொண்டு வந்தார்கள் என்று கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர். தீர்வு குறித்து இந்த அரசுடன் பேசிவிட்டோம் என்றனர். தீர்வு குறித்து ஜனாதிபதியுடனும் பிரதமரிடமும் கூறிவிட்டோம் என்கின்றனர். ஆனால் அவர்கள் என்ன கூறிவிட்டார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

நம் மக்களைப் பொறுத்தவரை எல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளன. அனைத்தும் கானல் நீராகி விடுமோ, இலவு காத்த கிளியின் நிலை ஏற்படுமோ என்ற ஏக்கம் அவர்களுக்கு.

3 ஆவது திருத்தமே நல்ல அடிப்படை

நாம் ஆரம்பத்தில் இருந்தே, இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இருந்தே, தேசிய நீரோட்டத்தில் இணைந்தவர்கள். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் ஆரம்பித்து, அதனை அடிப்படையாகக் கொண்டு முன்னோக்கி நகரலாம் என வலியுறுத்தி வருகிறோம்.

வாக்குச் சுருட்டுவதற்காக - சுயலாப அரசியலுக்காக - சக தமிழ்க்கட்சியினர் முன்வைத்த கோஷங்கள் எல்லாம் இப்போது அர்த்தமற்றவையாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

இப்போது புதிதாகத் தீர்வுத் திட்டம் குறித்து இந்தியாவுடனும் பேசப் போகின்றோம் என்கிறார்கள்.

எல்லாப் போராளிகளினதும், பொதுமக்களினதும் போராட்டங்களின் விளைவாகத்தானே இலங்கை - இந்திய ஒப்பந்தம் வந்தது. அன்று அந்த ஒப்பந்தம் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் தமிழ் மக்களுக்கு இவ்வளவு துன்பம் வந்திருக்காது. இதைத்தான் அப்போதுமுதல் கூறிவருகின்றோம்.

அந்த ஒப்பந்தத்தைச் சரிவர நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிட்டு, மீண்டும் இந்தியாவுடன் பேசப் போகின்றோம் என்பதில் என்ன அர்த்தம் உள்ளது?

அண்மையில் புத்தகம் எழுதி வெளியிட்ட சிவ்சங்கர்மேனன் 'டக்ளஸ் தேவனாந்தா போன்ற கொள்கை மாறிகளுக்கு ராஜபக்ஷ அரசு இடம்கொடுக்காமல் தமிழ் மிதவாதத் தலைமைகளை முன்னிலைப்படுத்தியிருக்க வேண்டும்.' - என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

எங்களை ஏன் "கொள்கை மாறிகள்" என்று அவர் கூறுகின்றார்? ஆயுதப் போராட்டதைக் கைவிட்டு ஜனநாயக வழியில் தேசிய நீரோட்டத்துக்கு வந்தமைக்காகவா? 'மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி' என்று நாம் தொடர்ந்து ஒரே கோஷத்தை முன் வைத்து நிற்கின்றமையினாலா?

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி சமயத்தில் எம்.கே.நாராயணனுடன் சிவ்சங்கர் மேனனும் கூட வந்திருந்தார். அச்சமயம், நாராயணன் 'டக்ளஸ் நீங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்வது நல்லது' என்று கூறினார். அதை சிவ்சங்கர் மேனனும் ஆமோதித்தார். நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் எங்களைக் 'கொள்கைமாறிகள்' என்று அவர் குறிப்பிடுகின்றரா - என்பது தெரியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இந்திய உதவியுடன் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம், யாழ்ப்பாணம் புல்லுக்குளத்தில் கலாசார மண்டபம், வடக்குக்கான ரயில் பாதை என்று பல திட்டங்களை முன்னெடுக்க நாம் வழிசெய்தமையினாலா? தெரியவில்லை. இதுகுறித்து அவருக்கு கடிதம் எழுதி, விளக்கம் அளித்து, ஊடகங்களுக்குச் சொல்லலாம் என நினைக்கிறோம்.

நாரந்தனைச் சம்பவம்

தீவகம் நாரந்தனைச் சம்பவத்துக்கும் ஈ.பி.டி.பி.க்கும் சம்பந்தம் இல்லை. இந்த வழக்கில் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள், மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள்.

இந்த வழக்குத் தொடர்பாகப் பல கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் வழக்கு சம்பந்தமாக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதால், அந்த விடயம் தொடர்பில் நான் அதிகம் பேச விரும்பவில்லை.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருவர் வெளிநாட்டில் வாழ்கின்றனர். அவர்கள் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர். இவ் வழக்கிலிருந்து ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளவர் கட்சியின் ஆதரவாளரே தவிர, அவர் கட்சி உறுப்பினர் அல்லர். அவர் வேறு கட்சியைச் சார்ந்தவர்.

இந்த வழக்குக்கும் ஈ.பி.டி.பி.க்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. - என்றார். (உ)

இளவாலையில் அழுகிய நிலையில் சடலம் மீட்பு

யாழ். இளவாலைப் பகுதியில் பற்றைக்குள் இருந்து அழுகிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சுதுகல தேவகே குணசேன என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இளவாலைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் அழுகிய நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்த பொதுமக்கள், இளவாலைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

மல்லாகம் நீதிவான் மரண விசாரணைகளை மேற்கொண்டதன்பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சடலத்தின் சட்டைப் பையில் இருந்து தொலைபேசி இலக்கம் ஒன்று மீட்கப்பட்டது. அந்த இலக்கத்துடன் தொடர்புகொண்டபோது சடலமாக மீட்கப்பட்ட நபர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சுதுகல தேவகே குணசேன என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நபர் ஊர் ஊராகத் திரிபவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

போலியான வவுச்சர்களைத் தயாரித்து பாடசாலைச் சீருடைத்துணி கொள்வனவு

கொழும்பு,டிசெ.20

போலியான வவுச்சர்களைப் பயன்படுத்தி பாடசாலைச் சீருடைத் துணிகளைக் கொள்வனவு செய்தசம்பவம்பத்தேகம பிரதேசத்தில்உள்ளஆடையகம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

போலியான நான்கு வவுச்சர்களைப் பயன்படுத்தி இந்த வர்த்தக நிலையத்தில் பாடசாலைச் சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அந்த ஆடையக உரிமையாளர் வவுச்சர்களை வங்கியில் வைப்புச்செய்வதற்காகச்சென்ற போதே நான்கு வவுச்சர்கள் போலியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நான்கு வவுச்சர்களிலும் இரகசிய இலக்கங்கள் தவறானவை என்று வங்கி உத்தியோகத்தர்கள் கண்டறிந்து அந்த வவுச்சர்களை நிராகரித்துள்ளனர்.

அந்த வவுச்சர்களில் பாடசாலையின் இறப்பர் முத்திரையை பதிவதற்குப் பதிலாக பேனாவால் பாடசாலையின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

மத்துகம – கட்டுகஹஹேன கனிஷ்ட வித்தியாலயத்தின் பெயருடையய மூன்று வவுச்சர்களும் பத்தேகம – விலகொட கனிஷ்ட வித்தியாலயத்தின் பெயருடைய ஒரு வவுச்சருமே இவ்வாறு போலியானவை என்று கண்டறியப்பட்டுள்ளது என ஆடையக உரிமையாளர் தெரிவித்தார். (ம)

பல்ஸரில் வந்து சங்கிலி அறுத்த 2 இளைஞர்கள் ஓமந்தையில் கைது

ஓமந்தையில் வீதியால் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவரின் ஐந்து பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டர் சைக்கிளில் தப்பிச் சென்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, ஓமந்தை, நவ்வி கிராமத்தில் நேற்று முன்தினம் வீதியால் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவரை பல்ஸர் ரக மோட்டர் சைக்கிள் ஒன்றில் பின்தொடர்ந்த இளைஞர்கள் அந்த யுவதி அணிந்திருந்த ஐந்துபவுண்தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட யுவதி ஓமந்தை பொலிஸ் நிலையத்தில்முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார். இதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்றுவிசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில்மோட்டார்சைக்கிள்ஒன்றை கைப்பற்றியிருந்தனர். தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவரை கைது செய்தமையுடன் அவரதுவாக்குமூலத்தின்அடிப்படையில் மற்றைய இளைஞனையும்கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஓமந்தைப் பொலிஸார்கைதுசெய்யப்பட்ட இருசந்தேகநபர்களையும்நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (உ-100)

அண்ணனின் கத்திக்குத்தில் தம்பி துடிதுடித்துப் பலி

பருத்தித்துறை தும்பளையில் நேற்றிரவு சம்பவம்

வடமராட்சி, டிசெ.20

சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு கத்திக்குத்தில் முடிந்ததில்ஒருவர்மரணமடைந்தார். பருத்தித்துறை – தும்பளை தெற்கு பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் சுவர்ணன் (வயது 20) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவர் அண்மையில் இடம் பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு பெறுபேற்றுக்காக காத்திருந்த மாணவனாவார்.

நேற்று இரவு 8 மணியளவில் வீட்டில்சகோதரர்களுக்கிடையே தகராறு நடைபெற்றதாகவும், இதன்போது ஒரு சகோதரர் உடற்பயிற்சிக்காக வெளியே சென்றிருந்த (மரணமடைந்த) சகோதரருக்கு அந்தவிடயத்தை தெரியப்படுத்தினார் எனவும் கூறப்படுகின்றது.

இதனைக்கேள்விப்பட்டுசகோதரன் வீட்டிற்குச் சென்றபோது அவரது தமையன் கூரிய ஆயுதத்தால் அவரைக் குத்தினார் எனத் தெரியவருகின்றது.

படுகாயமடைந்த அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோதிலும் அவர் 8.30 மணியளவில் உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-40)

14 அம்சக் கோரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்என்றுஅப்போதெல்லாம் அதிகாரிகள் பதிலளித்தனர்.

ஆனால், இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. இதனை அடுத்தே நாங்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் இறங்கியிருக்கின்றோம் – என ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எச். கே.காரியவசம் கூறினார்.

நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் – இன்று அதிகாலை முதல் – 48 மணி நேரம் இந்த வேலை நிறுத்தம் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தபால் ஊழியர்கள் மேற்கொள்ளும் வேலை நிறுத்தத்தால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என தபால்மா அதிபர் பி.எல். அபயரத்ன நேற்று மாலை அறிவித்தார். (ம)

மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தைச் சேர்ந்த உறுப்பினர் அன்ரனிஜெயநாதன்அண்மையில் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டார்.

இவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பங்காளிக்கட்சிகளில் ஒன்றாகிய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்ததைச் (ரெலோ) சேர்ந்தவராவார்.

மாகாண பேரவைச்செயலகத்தில்பேரவையின்தலைவர்சி.வீ.கே.சிவஞானம்முன்னிலையில் இவர்சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், கேசவன் சயந்தன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தவராசா மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மாதங்களாகவே இப் பிரச்சினை நீடிக்கின்றது. கட்சி ஏற்கனவே எடுத்த முடிவை நிறைவேற்றுவது எப்படி என்றுதான் நாம் ஆராய்கின்றோம். தேவைப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம்.

கேள்வி:- தவராசாவுக்கு தனிப்பட்ட செல்வாக்கு அதிகரித்தமையே இந்த முரண்பாட்டுக்குக் காரணமா?

பதில்:- எமது கட்சியில் தவராசா இருந்த போது கட்சி உச்சமாக இருந்தது என்றும், அவர் விட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஓடியபோது கட்சி பொத்தென்று விழுந்துவிட்டது என்றும், அவர் மீண்டும் வந்து சேர்ந்து செயற்பட்டதும் கட்சி ஓஹோ என்று உச்சத்துக்கு ஏறியது என்றும், அவர் இப்போது கட்சியுடன் முரண்பட்டதால் கட்சி கீழே வீழ்ந்து விட்டது என்றும் கூற முடியாது. கட்சி தன் போக்கில் போய்க்கொண்டிருக்கும். அவரவர் வந்து போய்க் கொண்டிருப்பர்.

ஐ.ம.சு.முன்னணியின் செயலாளரின் கடிதத்தின் பெயரிலேயே அவருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இப்போதும் அவர் ஒரு கடிதம் வழங்கியிருக்கிறார். அதன்படி நடப்பது அவரது கடமையும் பொறுப்புமாகும்.

நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பினர் 16 பேர். ஆனால் கூட்டு எதிரணி என்ற பெயரில் 52 எம்.பி.க்கள் இயங்கிவருகின்றனர். எதிர்க்கட்சி எம்.பிக்கள் மத்தியில் தேர்தல் நடத்தி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தெரிவு செய்யப்படவில்லை. சிறுபான்மை எண்ணிக்கையான தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி:- அந்த எதிர்க்கட்சித்தலைவர் விடயத்தில் மாகாண சபை அவைத்தலைவரின் முடிவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பீர்களா?

பதில்:- நாம் அது குறித்து யோசிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஒரு சட்ட பூர்வமான பதவியல்ல.

நாங்கள் தவராசாவுக்கு உரிய வகையில் கடிதம் எழுதியுள்ளோம். கட்சி முடிவுப்படி எதிர்க்கட்சித்தலைவர் பதவியை விட்டுக்கொடுக்காவிட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவருக்கு கடிதம் எழுதியுள்ளேன். நிலைமை இப்படியே நீடித்தால் அவர் கட்சியின் உறுப்புரிமையை இழக்க வேண்டி வரும். அப்படி நேர்ந்தால் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் பதவியை மட்டுமல்ல, மாகாணசபை உறுப்பினர் பதவியைக்கூட அவர் இழக்க வேண்டி வரலாம். – என்றார். (உ)

விபத்தில் பலியான மக்களுக்கு சாவகச்சேரியில் நேற்று அஞ்சலி

இன நல்லிணக்கத்தின் வெளிப்பாடு

சாவகச்சேரி – சங்கத்தானையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கோர விபத்தில் பலியான தென்னிலங்கையைச் சேர்ந்த பொதுமக்களுக்கு விபத்து நடைபெற்ற அதே இடத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கத்தானையில் உள்ள வர்த்தகர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் இளைஞர்கள் இணைந்து இந்த அஞ்சலி நிகழ்வை நடத்தினர்.

உயிரிழந்த 11 பொதுமக்களினதும்நினைவாக11மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனையும்இடம்பெற்றது.

இதேவேளை, மேற்படி பொதுமக்களின் வாகனம் விபத்துக்குள்ளாகியவுடன் அதில் பலியானவர்களின் சடலங்களை மீட்பதிலும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புவதிலும் சங்கத்தானையைச் சேர்ந்த மேற்படிவர்த்தகர்களும் முச்சக்கரவண்டிச் சாரதிகளும் பெரும் பங்காற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-23)

தமிழரைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் கூட ஜனாதிபதியின் அதிகாரங்களை மாகாண ஆளுநர்கள் பிரயோகிக்கின்றார்கள். இந்தியாவின் மாநில சட்ட சபைகளை ஆளுநர்கள் கலைக்க முடியும். ஆனால் இலங்கையில் அப்படிச் செய்ய முடியாது. அதுவும் ஒற்றையாட்சி முறையின்கீழ்அப்படிக்கலைக்க முடியாத நிலை இருப்பது ஆபத்தானது.

நல்லாட்சி அரசு தமிழரை சமாதானப்படுத்துவதற்காக சிங்கள மக்களைப் பகைத்துக் கொள்ள முயல்கிறது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

35 வயதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கான தேசிய கொள்கைஒன்றைவகுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, இது தொடர்பில் முச்சக்கர வண்டி சங்கங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்றை நேற்று கொழும்பில் நடத்தியது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது, 9 தலைப்புக்களின் கீழ்கலந்துரையாடப்பட்டது. முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தாலும் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

தற்போது நாட்டில் சுமார் 12 லட்சம் முச்சக்கர வண்டிகள் காணப்படுகின்றன எனவும் எதிர்காலத்தில் முச்சக்கர வண்டிகள் இறக்குமதி செய்வதை வரையறுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இங்கு கூறியுள்ளார்.

முச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் பயணிகளினதும் சாரதிகளினதும் பாதுகாப்பு கருதி சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வயதெல்லையை 35 ஆக அதிகரிப்பது எனவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார். (ம)

தமிழ்க் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்த ஈரோஸ் செயலாளர் நாயகம் இ.பிரபாகரன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழ்மக்களின்பிரச்சினைக்கு 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வு முன்வைக்கப்படாவிட்டால் தாங்கள் பதவிவிலகிவிடுவார்கள்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடந்த வருடம் கூறினார்கள்.

இதுவரை தீர்வு முன்வைக்கப்படவில்லை. இதனால் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் பதவி விலகவேண்டும். அவர்கள் அப்படிச்செய்வார்களா?-என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சியில் இருந்தபோது, ஈரோஸ் அமைப்பு 13 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வலுவாக அமைப்பாக இருந்தது. தீர்வைஉரியநடவடிக்கைஎடுக்காவிட்டால் தாம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்வார்கள் என்று பகிரங்கமாகத் தெரிவித்து அதன்படி பதவிகளைத் துறந்தார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-70)

நீதிபதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுள்ள சுதந்திரமான சூழலை இணையத்தளங்கள் தவறான வகையில் அப்பட்டமாக மீறி வருகின்றன.

விமர்சனங்கள்,பழிச்சொற்கள் என்பன அரசியல்வாதிகளுக்குப் பழகிப்போனவிடயங்கள். ஆனால் இன்று நீதிபதிகள் உட்பட நீதித் துறையினரை இலக்கு வைத்துப் பாரிய பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை அவர்களின் சுயாதீனத்தன்மைக்கும் கௌரவத்துக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளன.

அரசின் கொள்கைகளை நல்லாட்சி என்ற பெயருடன் மட்டும் மட்டுப்படுத்திவிடாது நீதித்துறை, அரச சேவைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் இருக்க வேண்டிய சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். நீதிமன்றத்தின் சுயாதீனத்தையும், பக்கச் சார்பின்மையையும் ஏற்படுத்துவது அரசின் பொறுப்பாகும்.

இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளமை குறித்து அரசாங்கம்கவலைப்படுகின்றது.எவ்வாறாயினும் அடிப்படையற்ற பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு ஒருவரின் நற்பெயரைக் களங்கப்படுத்தும் வகையில் தகவல்களை வெளியிடும் இணையத்தளங்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைஎடுப்பதற்கானநடவடிக்கைகளைநாம்மேற்கொண்டுள்ளோம்.

இதற்காகப்புதியசட்டங்களைத் தயாரிக்கவும் தீர்மானித்துள்ளோம். நல்லவர்கள் பலர் இருக்கும் சமூகத்தில் ஒருசில புல்லுருவிகள் இருந்துகொண்டு மேற்கொள்ளும் இவ்வாறான மோசமான நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட இடமளிக்க முடியாது.

அதனாலேயே பொய்ப்பிரசாரங்களைமேற்கொள்ளும்இணையத்தளங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள நாம் தீர்மானித்துள்ளோம். – என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.